SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 45-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 17-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பிரேதக்குழிகளின் பிரலாபம்!

அன்றுகார்த்திகைமாதம் 1-ந் திகதி சாயந்தரவேளை போலும். அவரதுசகோதரன் பீற்றரும் கோவில்சென்று உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்காக வேண்டுதல்செய்தபின் சேமககாலையைத் தரிசிக்கப்போயினர். அழகுறளங்கும்துப்பரவுசெய்யப்பெற்றிருந்த அந்தச்சேமக்காலை அமைதிக்கோர் இருப்பிடமாகத் திகழ்ந்தது. அதன் மத்தியில் அமர்ந்திருந்த புதியசிற்றாலயத்தின் உயரியகோபுரம் எவரையும் கண்களைமேலேஏறெடுத்து மேலுலகசிந்தனையை எழுப்புவதாய்இருந்தது. அதன்முன்னே நிறுவப்பெற்றிருந்தஅறையுண்டபெரியசுரூபத்தின்பரிதாபகோலமானது பாவிகளின் உள்ளங்களைக் கசிந்துருகப்பண்ணக்கூடியதாயிருந்தது.

சேமக்காலையுள் பிரவேசித்த சகோதரர்இருவரும் அருள்பொலிந்த அச்சுரூபத்தை ஓர்தரம் பக்திப் பரவசத்துடன் உற்றுநோக்கினர். அதிலிருந்து திவ்வியஉதிரம் பெருக்கெடுத்து ஓடுவதுபோலவும், யேசுக்கிறீஸ்துநாதரின் இளைப்புத்தவிப்புகள் சேர்ந்தபெருமூச்சுகள் தங்கள்செவிகளில் ஒலிப்பதுபோலவும், தேகத்தின்உளைவும் வலியும், நோக்காடுந் தாங்கமாட்டாமல் சிலுவைமரத்தில்இருந்து அவரதுதிருமேனி புழுப்போலத் துடித்து நெளிவதுபோலவும் அவர்கள் மனக்கண்முன் காட்சியளித்தன.

"அந்தோ! பாவிகளுக்காகத் தேவரீர்சொல்லமுடியாத வேதனைப்படுகின்றீரே! தேவரீர்சிந்தும் திருஇரத்தப்பலன்களை நாங்கள்இழந்துபோகாதபடி அருள்கூரும்ஆண்டவரே" என்றுஅவர்கள்மனதிற் சொல்லிக்கொண்டு ஓர்கால் பெருமூச்செறிந்துவிட்டுத் தங்களையறியாமலே அவ்விடத்தில் முழந்தாளில்இருந்து இருகரங்களையும் குவித்துக்கொண்டு செபமாலையைச் செபிக்கத்தொடங்கினர்கள்.

உலகத்துக்கு வெப்பத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த சூரியனும் மக்களுக்குஅமைதியைத் தந்து கடலுட்குதிக்கின்றது. கார்மேகம் பூமியைக்கவிழ்ந்துகொள்ள முனைகின்றது. மிருகங்கள் பட்சிசாலங்களின் இசையும் அடங்கிக்கொண்டிருந்தது. அப்போது குடிகொண்டிருந்த அமைதியைச் 'சோ' என்று வீசும் வாடைக்காற்றானது மரங்களில்மோதி எழுப்புந்தொனியால் இடையிடையே சிதறியடித்துக்கொண்டிருந்தது.

உள்ளத்தில் எழுந்துகொண்டிருந்த உணர்ச்சிப்பிரவாகத்தால் இருவரும் தங்களையே மறந்தவர்களாய் அவர்கள்எங்கேயோ தூரந்துலையில் தங்கள்கவனத்தைச்செலுத்தி எதையோ உற்றுக்கேட்பவர்கள்போல் காணப்பட்டனர். செபிக்கத்தொடங்கிய செபமாலையையும், அவர்கள் செபித்ததாகத் தெரியவில்லை. செபமாலை மணிகள் அவர்கள்கைகளில் உருண்டோடாமல் அவர்களைப்போலவே ஸ்தம்பித்துவிட்டன. பயங்கரம், பரிதாபம், சோகம், இரக்கம் முதலியஉணர்ச்சிகள் அவர்களதுமுகமாகிய அரங்கமேடையில் மாறிமாறிக் காணப்பட்டன. பயங்கரம் அவர்களை உருக்குலைத்து ஆட்டத்தொடங்கியது. இந்தநிலையில் இதோ! அந்தச் சேமக்காலையில்உள்ள பிரேதக்குழிகள்எல்லாம் வாய்திறந்து அழுதுபிரலாபித்து முறையிடுவது அவர்களதுசெவிகளில்விழுகின்றன....

அவர்கள் முழந்தாளிலிருந்த திசைக்கு வடகிழக்குப்பக்கமாகவிருந்த ஓர்பிரேதக்குழியில் இருந்து: "ஐயோமக்களே! நீங்களாவது என்மேல் இரக்கமாக இருங்கள். தெய்வநீதியின்கரம் என்மேல் விழுந்திருக்கின்றது. இதோ! நான் இந்தநெருப்பில் இருந்து மரணவேதனையிலும் கொடியவேதனை அனுபவிக்கின்றேனே. நாவாலேஉரைக்கவும் மனதாலே உணரவும்முடியாத கஸ்திகளுக்குள்ளாயிருக்கின்றேன். நான் வேறுயாருமில்லை. உங்களை அன்போடு பெற்று வளர்த்த உங்கள்நேசத் தந்தைதான். உலகத்தில் இருக்கும்பொழுது உங்களை எவ்வளவு கவனமாகச் சீராட்டிப்பாராட்டினேன். உங்களுக்கு நல்லகல்வியூட்டினேன். மதிப்புக்குரிய மனிதர்களாகவும் ஆக்கிவிட்டேன். உங்கள் ஒசீவனத்துக்காக நான்கொஞ்சம் தவறான முறையில் பொருள்தேடிய குற்றத்துக்காகத் தேவன் இதோ என்னை உத்தரிக்கிறஸ்தல ஆக்கினையிற்போட்டு இவ்விதம்தண்டிக்கிறார். ஆ! என்அன்பான

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

## இரகசியங்கள் ஒன்பதும் எவையாய் இருக்கும்?

மத்தியஇத்தாலியில் பரந்திருக்கும் மலைகளின்மேலே, ரோமைநகருக்கு வடகிழக்காக நூற்றுச்சொச்சமைல தூரத்திலே, ஜிமிக்லியானே எனும இயற்கைஎழில்வாய்ந்த கிராமம் ஒன்றுள்ளது. அங்கு கடல்மட்டத்திற்குமேல் அநேகமைல் உயரமான அப்பினைன்ஸ்மலைகளின் அழகிய வெண்சிகரங்கள் மேலெழுந்து விண்மேகங்களுடன் சஞ்சரித்திருக்கக் காணும் இங்கிர்தகாட்சியானது, அமரர்உலகும், இந்தஅகிலமும் தூயகற்பினுல்பந்திக்கப்பட்டிருக்கிறதோஎன்ற சிந்தனையை உண்டுபண்ணுவதாயிருக்கும். இந்தமலையில்வாழும், மக்கள் கீழே வசிக்கிறவர்களின் விவாதங்கள், பிறகாரியங்களை அதிகமாகக் கவனிப்பதில்லை. போர்த்துக்கால் நாட்டில் அதே காட்சி அனுக்கிரகிக்கப்பெற்ற பத்திமாகிராமவாசிகளைப்போலவே பெரும்பாலும் இவர்கள்எழுதவோ அல்லது வாசிக்கவோ அறியமாட்டார்கள். கீழே உலகப்பத்திரிகைகள் "உலகின் நிலைமை"பற்றி ஏதுதான் எழுதியபோதிலும், அவர்கள் யாதுமே அக்கறையற்றவர்களாய்த் தங்கள் மலைநாட்டுநிலங்களை உழுதுபயிர்செய்து, உடைநடையிலே ஆடம்பரமற்றவகையில் நடந்து, தங்கள் அயலவர்க்காகவும், பிள்ளைகளுக்காகவுமே சீவித்துவருகின்றார்கள். அதனல் இவர்கள் அந்நாட்டிலுள்ளவர்களில் அதிகம் ஏழைகள். இவர்களிடம்அதிகபணம்இல்லை. அதனல் வெளியுலகம் இவர்களில் யாதுமே கரிசனைகொள்வதில்லை. ஆனல், இன்று இவர்களைப்பற்றியும், இவர்கள் கிராமத்தைப்பற்றியும் சிந்தியாத பேர்கள் அந்நாட்டில் இல்லையெனலாம். இதற்குக்காரணம் என்ன?

### முதலாவது காட்சி

இம்மலைப்பிரதேசத்தில் வாழும் பன்னிருவயதுச் சிறுமியான அனிற்ரு பிறெடெறஸி எனும் பெண்பிள்ளை ஓர்நாள் விறகுபொறுக்கிக்கொண்டிருக்கும்போது, மலையிலே செங்குத்தான ஏற்றம்ஒன்றின் பக்கமாகக் கற்பாறைஒன்றின்பிளவிலே [illegible]ப்பிரகாசத்துடன் சம்மனசானவர் ஒருவர் தனக்குமுன்பாக நிற்கக்கண்டதே அவள் மிகுந்த திடுக்காட்டமுற்றுத்திகைத்துநின்றாள். 1948-ம் ஆண்டு சித்திரைமாதம் 3-ந்திகதியே அன்றுதினம். அங்கே அருளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள முப்பதுகாட்சிகளில் இதுவேமுதலாவது. ஆரம்பகாட்சிகள் ஐந்திலும் சம்மனசானவரே காணப்பட்டார். ஏனையகாட்சிகள் இருபத்தைந்திலும் அவ்வப்போது நான்கு சம்மனசுகளோடும், ஈருந்த காட்சிகளிலே தமது கரங்களில் தம்முடைய திருக்குமாரனை குழந்தையேசுவைஏந்தியவாறும் தேவதாயாரே காட்சியளித்தார். கடைசிமுறையாக ஓர்சோலைக்கு வெளியே உலாவிவரக் காணப்பட்டு இந்த இடத்துக்கு நாம் திரும்பிவருவோம்என்று அனிற்ருவுக்குச் சொல்லியபோது மாதா ஓர் தோட்டத்தில் நின்ரூர். முந்திய ஓர் சந்தர்ப்பத்திலே குருப்பிரசாதிகளின் ஊர்வலம் ஒன்றுடன் அவர் வந்திருந்தார். பரிசுத்த தைலங்கொண்டு அபிஷேகஞ்செய்யப்பெற்ற தேவனின் குருப்பிரசாதிகளாய்க் குருத்துவ அங்கியும், சேர்ப்பிளிஸ் எனப்படும் மெல்லிய வெள்ளங்கியும் தரித்தவர்களாய் ஏழுஅல்லது எட்டுப்பேராக அந்த ஊர்வலத்திலே ஆயிரக்கணக்கானேர் இருந்தார்களென அப்பெண்பிள்ளை கூறினள். அதனைக்கண்ணுற்றுத் தேவதாயார் பெரிதும் உவகை எய்தினராம்.

### ஒன்பது இரகசியங்கள்

தொடர்பாக அருளப்பட்டு வந்த இந்தமுப்பது காட்சிகளும் 1948-ம் ஆண்டு சித்திரை 3-ந் திகதிமுதல வைகாசி 23-ந்திகதி வரையில் நீடித்திருந்தன. முதலிலே சம்மனசானவர் தனிமையாகவந்தார். சித்திரை மாதம் 18-ந்திகதியன்று தேவதாயார் முதன் முதலாகக் காணப்பட்டார். இந்தநவமான சம்பவங்கள் ஒவ்வோர்நாளும் அல்லது இருநாளைக்கு ஒருமுறையுமாக நடந்தேறின. கடைசிமுறையன்று நாம் திரும்பவும் வருவோம்என்று தாயார் வசனித்தார். இதுவிஷயமாய் அனிற்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சத்தியவேத பாதுகாவலன்**

**Supplement to the Catholic Guardian**

வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்

**கையொப்ப விகிதம்**

முற்பணமாகக் கட்டவேண்டும்

| தமிழ் | | இலங்கை | தமிழும், இங்கிலிசும் | |
|---|---|---|---|---|
| வருஷம் | 5-50 | | வருஷம் | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | | அரை வருஷம் | 5-50 |
| | | மற்றும் தேசங்களுக்கு | | |
| வருஷம் | 6-00 | | வருஷம் | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | | அரை வருஷம் | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.

மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.


## கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்

[வரைவுள்ளது]

### 1948-ம் ஆண்டுக்கான

## 14-வது வருட அறிக்கை

யாழ்ப்பாணம், கரையூர் விவாக இலாபநிதிச்சங்க 1948-ம்ஆண்டுக்கான பதினான்காவதுவருட அறிக்கையும், பரிசோதிக்கப்பட்ட வரவுசெலவுக் கணக்கும் வருமாறு :—

**அங்கத்துவம் :-**

| | | |
|---|---|---|
| 1-1-48 | 2,301 | |
| 1948-இல் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள் | 181 | |
| மொத்தம் | | 2,482 |
| **குறைவு :—** | | |
| திரும்பப்பணம் பெற்றுக்கொண்டவர்கள் | 36 | |
| இலாபநிதி பெற்றவர்கள் | 101 | |
| நீக்கப்பட்டவர்கள் | 40 | 177 |
| 31-12-48-இல் இருக்கும் அங்கத்தவர் | | 2,305 |

**இலாப உபகரிப்புப் பணம் :**

இச்சங்கத்தால் அங்கத்தவர்கள் அடையும்பலன் எல்லாருக்கும் தெரிந்ததே. பின்னால் காட்டப்பட்டிருக்கும் கணக்குகளின்படி இவ்வருடம் 101 அங்கத்தவர்கள் 20,906 ரூபா 09 சதம் இலாபநிதியாகப் பெற்றிருக்கிறார்கள்.

நிலுவைப்பணத்தைப்பற்றியும், திரும்பிச்சேர்தலைப்பற்றியும் இச்சங்க 19-ம் 20-ம் 21-ம் இலக்கவிதிகளை மீண்டும் மீண்டும் அங்கத்தவர்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம். அதிகமானோர் இந்தஒழுங்குவிஷயத்தில் மிகவும் அசட்டைத்தனமாய் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஒழுங்குச்சட்டங்கள்எல்லாம் அச்சிட்டு வழியேட்டின்உட்பக்கங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

இச்சங்கமானது நமதுமேற்றிராசனக்கத்தோலிக்கருக்குச் செய்துவரும் சேவைகளைக் கவனித்த வேறுமேற்றிராசனங்களைச்சேர்ந்தபலர் தங்களையும் அங்கத்தவர்களாக்கிக் கொள்ளுமாறு அனுப்பிய விண்ணப்பங்களையெல்லாம் வருத்தத்துடன் மறுக்கவேண்டியதாயிற்று என்பதையும் இங்கேகுறிப்பிட விரும்புகிறோம்.

காரியநிர்வாகசபையார் கடந்தவருடத்தில் 5 கூட்டங்கள்கூட்டி நிலுவைகள், அங்கத்துவமாற்றம்பற்றிய விஷயங்களை மிகவும்நுணுக்கமாகப் பரிசீலனைசெய்தனர்.

இச்சங்கமானது பலவிசாரணைப் பங்குகளிலுமுள்ள வண. குருமார்களினதும், ஆசிரியர்களினதும், சமூகத்தொண்டர்களினதும் இடையறுத முயற்சியின்பலனாக இன்று தலைநிமிர்ந்து செழிப்பாகநிற்கின்றது. இவ்விதநிலைமைக்குக் காரணமான இந்தஉத்துழைப்பாளர்கள் எல்லோருக்கும் காரியநிர்வாகசபையார் தங்கள் இருதயபூர்வமான வந்தனத்தைச்சமர்ப்பிக்கின்றார்கள்.

நிர்வாகசபையின் சார்பில்

**L. S. இராசநாயகம்**

காரியதரிசி.

### 31-12-48 இல் முடிந்த வரவு செலவுக் கணக்கு

வரவு

| | | | |
|---|---|---|---|
| கட்டணம் :- | | | |
| 31-12-47-இல் கையிருப்பு | 38,914-17 | | |
| கடந்தவருட வரவு | 23,568-67 | 62,482-84 | |
| கழிக்கப்படவேண்டியவை :- | | | |
| விவாக இலாப உபகரிப்பு | 20,906-09 | | |
| திருப்பிக்கொடுத்த பணம் | 686-20 | | |
| அங்கத்துவ கட்டணம் | 1,140-07 | | |
| குற்றப்பணம் | 312-30 | | |
| வழியேட்டுப் பணம் | 11-00 | 23,055-66 | 39,427-18 |
| நிச்சயிக்கப்படாத தொகை வாடகை | | | 50-00 |
| இலாபநிதி உரிமை | | | 2,438-58 |
| பிணைப்பணம் திரு. S. D. லோறன்ஸ் | | | 570-00 |
| வாங்காமலிருக்கும் திருப்பிக் கொடுக்கவேண்டிய பணம் | | | 16-50 |
| சேமநிதி 31-12-48 | | 17,196-34 | |
| நிச்சயிக்கப்படாத இலாபஉரிமை | | 1,601-45 | |
| இலாபநஷ்டக்கணக்கால் இருப்பு | | 2,495-71 | 21,293-50 |
| | | | 63,795-76 |

செலவு

| | | |
|---|---|---|
| தேசிய சேமிப்பு நிதியில் | 17,000-00 | |
| ஈட்டுக்குக் கொடுக்கப்பட்டது | 45,959-20 | |
| சிறுதொகைப்பணம் சேமிக்கும்நிதி | 570-00 | 63,529-20 |
| மேக்கன்ரைல் வங்கியிலுள்ளது | 266-02 | |
| கையிருப்பு | -54 | 266-56 |
| | | 63,795-76 |

### இலாப நஷ்டக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| கந்தோர் வாடகை | 50-00 | பிரவேசக் கட்டணம் | 94-50 | |
| துணையாளர்வேதனமும் உபகரிப்புப்பணமும் | 2,509-02 | அங்கத்துவ கட்டணம் | 3,061-52 | |
| பணம்வசூலிப்போர்கழிவு | 292-05 | குற்றப்பணம் | 759-15 | |
| முத்திரைச்செலவு | 55-85 | வட்டி வரவு | 2,061-94 | |
| அச்சுக்கூலி | 305-58 | வழியேட்டு விற்பனை | 18-00 | |
| பரிசோதகர் வேதனம் | 250-00 | | | |
| பிரயாணச் செலவு | 15-75 | | | |
| பிணைப்பண வட்டி | 20-50 | | | |
| சில்லறைச் செலவு | -65 | | | 5,995-11 |
| | 3,499-40 | | | |
| இலாபநஷ்டக்கணக்கால் | 2,495-71 | | | |
| | 5,995-11 | | | 5,995-11 |

மேற்கண்ட கணக்குகள் யாவும் சரியானவையென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

**K. கணேசபிள்ளை**

சங்கபொக்ஷகர்.

இக்கணக்குகள் பரிசோதிக்கப்பட்டு சரியெனக் காணப்பட்டது.

**என். செல்வரத்தினம்**

பிரசித்த பரிசோதகர்.

## இசை இன்பம்

(P. T. செல்வம்)

இசைஎன்பது, இசைப்பது, ஈட்டுவது எனப்பலபொருள்கொள்ளும் ஓர்பதம். பண்டைக்காலத் தமிழ்மக்கள் இசையைப் பலவாறுவளம்பெறச் செய்திருக்கின்றனர். அவர்கள் இசையைப்பலவற்றினின்றும் ஆக்கினர். இசையாக்கும் கருவிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிநாமங்களும் வகுத்திருந்தனர். துளைக்கருவியாகப் புல்லாங்குழல் போல்வனவும், தோற்கருவியாக உடுக்கை, பேரிகை, மத்தளம் முதலானவையும், நரம்புக்கருவியாக யாழ், பேரியாழ்முதலியனவும், கஞ்சற்கருவியாகக் கைத்தாளம், சதங்கைபோல்வனவும், மிடற்றுக்கருவியாக மக்கள்கீதமும் வகுக்கப்பட்டிருந்தன. அன்றியும்முன்னோர் அக்கருவிகள்கொண்டு மனோரம்மியமான, நுணுக்கமான பாடல்களைப் பாடியும் வந்திருக்கின்றனர். அவைகளைக்கேட்கும் ஓரறிவுயிர்தொடக்கம் ஆறறிவுள்ள மனிதனீறாகத் தன்னை மறந்து செயலற்று இசையுள்ளே மறைந்துவிடுகிறான். அத்துணை திறைமையான முறைமையை அப்போதே அன்னோர் ஆராய்ந்தறிந்து பலபடி பயின்று இசையீட்டும் வல்லுநராயினர். அவ்விசைக்கலை இன்றும் வளம் மங்கவில்லை, ஏனெனில், மிகவும்நுட்பமானமுறையில் அவைகள்அவ்வப்போதே நுண்மையாகப் பரிசோதித்துப் புதுக்கித்தொகுக்கப்பட்டன.

இசை ஓர்வசியசக்தி. இதைஉலகம் முழுவதுமே விரும்புகிறது. இனிமையான ஓர்பாட்டை ஒருவன்பாடுகிறான். அவன்குரல் அப்பாட்டை இசையோடு கலந்து வெளிப்படுத்துகிறது. வெளிவரும் அவ்இசைப்பாட்டு ஒழுங்கான ஓசையைப் படிப்படியே காட்டிக் கொண்டிருக்கும். தாளஓட்டம் ஒற்றுமையாகவே இசையோடு தொடர்புற்ற மற்றையவாத்தியக்கோஷ்டியுடன் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இசைப்பாட்டின் இனிதானபோக்கும், துணையாய்இயங்கும் பின்னணிக் கருவிகளினது இசையின்ஒத்த இயக்கமும் அவன்பாட்டை மிகவும்அலங்காரஞ் செய்து விடுகின்றன. அந்தஅலங்காரத்தால் உண்டாகும் அரும்பெருஞ்சுவைதான் ஆதிப்பொருளையும் மெய்மறக்கப்பண்ணும் ஆற்றல்கொண்டது. பிறந்தமதலை கணத்துக்குக்கணம் கூச்சல்இடுகிறது. அம்மா என்றசொல் அதன்வாயில் எங்கிருந்தோ வந்துவிழுகிறது. அந்நேரத்தில்தான் அது அம்மா என்கிறது. இடையான மற்றையநேரத்தில் பேசவோ, பார்க்கவோ, எதைத்தானும்செய்யவோ பண்ணற்ற அப்பாலன் தாயின் தாலாட்டுக்கு வசப்பட்டு, அசைவற்று ஆனந்தமாய் நித்திரைசெய்வது விந்தையில்விந்தையே.

அக்காலத்திலே கூத்தர், விறலியர், இசைவாணர்முதலான சாதியினர் இசைப்பாட்டியக்கத்திலே பிரஸ்தாபதிறம்பூண்டு ஒழுகியுள்ளனர். வள்ளல்களும், அரசர்களும்இசைக்குவசப்பட்டு அவர்களைத் தத்தம் அரண்மனை இசைவாணராக அமர்த்தியும், பெரும்பெரும் வெகுமதி வேண்டும்போதெல்லாம் அளித்தும்வந்துள்ளனர். இன்னும் இசைத்துணை தூரப்பயணம்பண்ணும் காண்வழிமக்கட்கும் கருதற்கரியதுணை புரிந்திருப்பது பழந்தமிழ்நூலிடை அறியக்கிடக்கின்றது. இசையைப்பற்றிக் கூறிச்செல்லும் சிலஇடத்தில் கீழ் வருவனவும் வியக்கத்தக்கதே. வயல் நிலங்களில் தினைப்பயிர்முதலானவை விளையும். விளைந்துமுற்றிய கதிர்களைக் கறித்துண்ணக் கிளிகளும், குருவிகளும் கூடிக்கூடிப்பறந்துவரும். இவைகளைஓட்டுதற்காக வயல்களிடையே உயரமான பெரியபரண்கள் அமைக்கப்பட்டிருக்கும். காலையிலும் மாலையிலும் பெண்கள் அப்பரண்கள்மேல் ஏறிக் கவண்வீசி விட்டும்விடாமலும் இன்னிசைபாடுவர். தினைப்பயிர்களை முடிக்கும்படிவந்த மதகரிகள் நிற்குமிடம்பெயராமல் அந்த இடத்தில் தானே இசைக்குவயமாகித் தூங்கிக் கிடந்து மறந்துதிரும்பும். இதுபோலவே 'அசுணமா' என்பது இசைக்குவசைப்படும் ஓர்பறவை. இப்பறவை இசைகேட்டதும் இடம்பெயராமல் அவ்விடத்திலேயேநின்று அவ்வின்ப இசையால் மயங்கிவிடும். இப்பட்சியைப் பிடிக்கக்கருதுவோர் இதுஉலாவும் இடம்சென்று யாழ்முதலியன கொண்டு இசைவருஷிக்கவே இது மயக்குற்று அப்படியே தூங்கிவிடும். அதுவேளை அசுணமாவைப் பிடித்துக்கொண்டு திரும்பலாம். இசைசம்பந்தமாகக் கந்துவரி, கானல்வரி, பிள்ளைப்பாட்டு, ஊசல்பாட்டு முதலானபாடல்களும் பகுதிபகுதியாகத் தாரதம்மியம் மிக்கனவாக அந்நாளிலே ஆக்கியும், மக்கள் அதனைநோக்கியும், பயின்றும்வந்திள்ளனர். இசைக்கென்றே தனித்தனி இலக்கணநூல்களும் அப்போதிருந்தன. அவற்றுள் 'இசைநுணுக்கம்' என்பதும் ஒன்று. மக்கள் இசைப்பாட்டை நன்குபயிலவேண்டும். பண்பாடுந்திறத்தில் படிப்படி உயர்ச்சி எய்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கிரவர்த்தினியின் கற்புநிலைபற்றி சமுசயித்த சக்கிரவர்த்தி

"இராசவம்சத்திலும், பிரபுவம்சத்திலும் எனக்கோ, அவளுக்கோ விரோதிகள்இருப்பது எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால், பாமரசனங்களும் அவ்வாறே சொல்லும்போது அதுபொய்யாயிருக்கக்கூடுமா?" என்றஎண்ணம் என்றி சக்கிரவர்த்தியின் உள்ளத்தைஉபாதித்தது.

சக்கிரவர்த்தினியின்விரோதிகள் எவ்வளவுசாமர்த்தியமாக அவள்பெயரைக் கெடுக்கும்வேலையை இடைவிடாமல் நடத்திவந்தனரெனில், இறுதியில்சக்கிரவர்த்தி: "எனதுபிரசைகளில் இவ்வளவுபேர் ஒருவாய்ப்படச்சொல்லுவது பொய்யாயிருத்தல்கூடாது. ஆ, என்ன மோசம்! கபடவேஷம்! குனெகுந்தா என்னை இவ்வாறு வஞ்சிப்பாளென்று கனவிலும் நான்கருதவில்லையே. என் தேவனே! நான்படுந்துயரத்தை நீரே பாரும். எனக்குஆறுதல்தாரும்" என்று பிரலாபிக்கும் நிலைமைக்குவந்தார். இந்தச்சக்கிரவர்த்தி யாரெனில் 972-ம்ஆண்டு பிறந்து, 995-ம்ஆண்டு பவேரியாவின்அரசாகச் சிம்மாசனம் ஏறி, 1002-ம்ஆண்டு ஜேர்மன்சக்கிரவர்த்தியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டாவது என்றிசக்கிரவர்த்தியே.

இவர்சிறுவத்திலிருந்தே பக்திநெறியில் வளர்ந்துவந்தவர். தமதுபெற்றோருக்கோ, பந்துக்களுக்கோ, நண்பர்களுக்கோ ஒருவார்த்தையும்சொல்லாமலே தர்ம்சாகுமட்டும் விரத்தத்துவகற்பை அனுசரித்துவருவதாகத் தேவனுக்குநேர்த்திபண்ணிக்கொண்டார். ஆனால், இவருடையதந்தைஇறந்து இவர்சிம்மாசனம்ஏறியபோது, இவர் விவாகம்பண்ணிக்கொள்ள வேண்டுமென்று பவேரியமக்கள் வற்புறுத்தினர். மணம் புரிந்துகொள்ளாவிடில் அவர்கள் புரட்சிபண்ணுவார்களெனத் தெரிந்ததால் அவர்அதற்கு இணங்கினார். தெய்வாதீனமாகத் தம்மைப்போலவே தனதுகன்னிமையின்கற்பைத் தேவனுக்கு அர்ப்பணம்பண்ணியிருந்த குனெகுந்தாஇளவரசி இவருக்குப்பத்தினியாகவந்து வாய்த்தாள்.

அங்ஙனம் என்றியும், குனெகுந்தாவும் சதிபதிகளான பிறகு சூசையப்பரும், தேவமாதாவும்போல விரத்தத்துவஇல்வாழ்க்கையை மேற்கொண்டு நடத்திவந்தனர். குனெகுந்தம்மாள் தனக்குக்கிடைத்த ஏராளமானதிரவியத்தை ஏழைகளுக்குத் தருமம்புரிவதிலும், மடங்களையும், புதியமேற்றிராசனங்களையும் ஏற்படுத்துவதிலும் பயன்படுத்திவந்தாள். 'புண்ணியவதி', 'உத்தமி', 'தயாளசிந்தையுடையவள்' என்று மக்கள்புகழவே, இராசமாளிகையில் நெருங்கிப்புழங்கும் சீமாட்டிகளுக்கும், ஆடவர்களில்சிலருக்குத்தானும் அவள்மீது பொருமையேற்பட்டது. இவர்கள்சாத்தானுக்குரிய தந்திரசாமர்த்தியத்துடன் அரசிக்குவிரோதமாக அபத்தப்பிரசாசம் பண்ணிவந்ததின்பயனாக, பிரபுக்களும் சீமாட்டிகளுமன்றிப் பாமரமக்களும் நாளடைவில் இராணியைப்பற்றி அவதூறுபேசத் தொடங்கிக்கொண்டனர். நாடெங்கும் இதேபேச்சாயிருந்தது. எனவே, இதில்கொஞ்சமாவது உண்மையிருத்தல் வேண்டும்என்ற முடிவுக்குவந்தார் என்றிஅரசர். அவர்அனுபவித்ததுயரம் வரையறுக்கும்தரமன்று. இராணியுடன்பேசுவதையே நிறுத்திக்கொண்டார்.

குனெகுந்தா இந்த விபரீதநிலைமையைப் பொறுமையுடன் கொஞ்சக்காலம்சகித்துவந்தாள். ஆனால், நாட்கள் செல்லச்செல்ல அவள்நெஞ்சம் வெடித்துவிடுவதுபோலஇருந்தது. ஒருநாள் தன்கணவரை அணுகி: "நாதா! நீங்கள்என்பால் நடந்துகொள்ளும்விதத்தை என்னால்தாங்கக்கூடவில்லை. நான் நிரபராதி. என் நடத்தையைப்பற்றிக் கடவுளேதீர்ப்பளிக்கட்டும். பன்னிரண்டு இரும்புக்கலப்பைக் கொழுக்களை உலையில்போட்டு நெருப்புமயமாகக் காய்ச்சக்கட்டளையிடுங்கள். நான் அவற்றின்மீது வெறும்பாதங்களால் நடந்துசெல்லுவேன். நான்குற்றமற்றவள்என்பதைக் கடவுள்அறிவார். அந்த நல்லதேவனைநம்பியே நான் இந்தச் சோதனைக்குஉட்பட முன்வந்திருக்கிறேன்" என்றாள்.

அரசரும் இந்தத்திட்டத்தை ஏற்றுக்கொண்டார். குறித்ததினத்தில் நகரின்ஆலயத்திற்கு எதிரேஇருந்த திறந்தமைதானத்தில் ஏராளமானசனங்கள் கூடியிருந்தார்கள். பழுக்கக்காய்ச்சிய பன்னிருகலப்பைக்கொழுக்கள் ஒன்றுக்குப்பின்ஒன்றாய் வரிசையாகவைக்கப்பட்டன. தகதகவென்றிருந்த இரும்புத்துண்டுகளைக்கண்டு அரசரின்மனம் இளகியது. இராணி முதல்இரும்பின்மீது தனதுபாதங்களை வைக்கப்போகும்தருணத்தில் என்றிஅரசரின்மனம் பதைத்தது. "நீ நிரபராதியென்று நான்ஏற்றுக்கொள்ளுகிறேன். அதன்மீது காலைவைக்கவேண்டாம்" என்று கத்தினார். குனெகுந்தாவோ: "இந்த இரும்பில் பிடித்திருக்கும்நெருப்பு எவ்வளவுஉக்கிரமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கும் எனதுகுற்றமற்றதனம் பிரகாசிக்கட்டும்" என்று சொல்லிக் கண்களைமேலேஉயர்த்தி: "ஆண்டவரே! என்தேவனே! உங்களுடைய தாழ்மையான அடியாளைக் காப்பாற்றியருளும்" என்று சொல்லிக்கொண்டே இரும்புத்துண்டுகளின்மீது நடந்து சென்றாள். பன்னிரண்டாவதுஇரும்பைஅடைந்ததும் அதன்மீது அவள் சற்றுநேரம் தரித்துநின்று தேவனுக்கு நன்றிசெலுத்தினாள். சனங்கள் அணைகடந்தசந்தோஷம் அடைந்தவர்களாய் ஆரவாரம்பண்ணினார்கள். என்றிஅரசர் அத்தனைஆயிரம் சனங்களுக்குமுன்பாகத் தமதுபத்தினியின்முன் முழந்தாளிட்டுத் தம்மைமன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

என்றிசக்கிரவர்த்தி இறந்தபிறகு குனெகுந்தம்மாள் ஒருமடத்தில் கன்னிகாஸ்திரியாகச்சேர்ந்து செபதபத்தில் காலங்கழித்து 1040-ம்ஆண்டு பாக்கியமான மரணமடைந்தாள்.

[அர்ச். குனெகுந்தம்மாளின் திருநாள் திருச்சபையில் பங்குனிமாதம் 3-ந்திகதியன்று கொண்டாடப்பட்டுவருகிறது. அர்ச்.என்றியின்திருநாள் ஆடி 15-ந்திகதியன்று கொண்டாடப்படுகிறது. அர்ச். என்றி தமதுசகோதரியை ஹங்கேரிதேசத்துஅரசராகிய அர்ச். முடியப்பருக்கு மணமுடித்துவைத்து, ஹங்கேரியமக்களைக் கிறீஸ்துவேதத்தில் கொண்டுவந்து சேர்க்கும்வேலையில் முடியப்பர்அரசருக்குப் பக்கத்துணையாயிருந்தார்.]

## கதம்பக் கச்சேரி

யாழ்ப்பாண நீதவான் திரு. கொன்றுட் பெறெறுவினதும் அவரதுபாரியாரினதும் போஷகத்தின்கீழ் கார்த்திகை மாதம் 19-ந்திகதி சனிக்கிழமை பின்னேரம் 6-30 மணிதொடக்கம் சம்பத்திரிசியார்கல்லூரிமண்டபத்தில் ஓர்பிரபல்யமான கதம்பக்கச்சேரி நடைபெறும். இதில்சேரும்பணம் யாழ்ப்பாணக்கத்தோலிக்ககிளப் வாசிகசாலைக்குப் பாவிக்கப்படும்.

ரிக்கற்விபரம்: ரூபா 3, 2, 1.
மாணவருக்கு சதம் 50.

❁ சென்னைநகரிலே சென்ற 6-ந்திகதியன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தசமுகத்திலே நடைபெற்றஓர் போட்டிக்குத்துச் சண்டையில் பிரபல குத்துச்சண்டைவீரரான திரு. எஸ். ஏ. அருணாசலம் ஆறாவது றவுண்டில் காயங்களுடன்கீழேவிழுந்து சிறிதுவேளையில் [illegible] ஆஸ்பத்திரியில் [illegible]

## இஸ்பிரீத். திரு. பின்வரும் 24-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(மத். 24: 15—35)

அக்காலத்தில் யேசுநாதர் தமது சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: தானியேல் என்னும் தீர்க்கதரிசிசொல்லியிருக்கிற அரோசிகமான நாசமே பரிசுத்தஸ்தலத்தில்நிலைத்து நிற்பதை நீங்கள் காணும்பொழுது, வாசிக்கிறவன் கண்டுகொள்ளக்கடவான். அப்போது யூதேயா தேசத்திலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவார்கள். மெத்தையிலிருக்கிறவன் தன்வீட்டிலிருந்து ஏதாகிலும் எடுக்க இறங்காதிருப்பானாக. வயலிலிருக்கிறவனும் தன்வஸ்திரத்தைஎடுக்கத்திரும்பிப்போகாதிருப்பானாக. அந்நாளில் கருப்பவதிகளுக்கும் பாலூட்டுகிறவர்களுக்கும் ஐயோ! கேடாம். குளிர்காலத்திலாகிலும் ஓய்வுநாளிலாகிலும் நீங்கள் ஓடிப்போகச்சம்பவியாதபடி மன்றாடுங்கள். ஏனென்றால், உலகாதிமுதல் இதுவரையிலில்லாததும் இனி இருக்கப்போகாததுமான பெரும் உபத்திரியம் அப்போது உண்டாகும். மேலும், அந்நாட்கள் குறைக்கப்பட்டாலொழிய எந்தமனிதனும் இரட்சணியம்அடையான். ஆனால், மோட்சஇராச்சியத்துக்குநியமிக்கப்பட்டவர்களினிமித்தம் அந்நாட்கள் குறைக்கப்படும். அக்காலத்தில், இதோ! கிறீஸ்துநாதர் இங்கே அல்லது அங்கே இருக்கிறாரென்று எவனாகிலும் உங்களுக்குச்சொல்வானாகில் நீங்கள் நம்பவேண்டாம். ஏனென்றால், கள்ளக்கிறீஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் தோன்றி, கூடுமாகில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்படியான பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ! உங்களுக்கு இதை முன்னமே அறிவித்தேன். ஆகையால், அவர் இதோ! வனாந்திரத்தில் இருக்கிறாரென்று உங்களுக்குச்சொல்வார்களேயாகில் நீங்கள் அவ்விடத்திற்குப் போகவேண்டாம். இதோ! வீட்டின் உள்கட்டிலிருக்கிறாரென்றால் நீங்கள் நம்பவேண்டாம். ஏனெனில், மின்னலானது கீழ்த்திசையிலிருந்து புறப்பட்டு மேற்றிசைவரைக்குந் தோன்றுவதெப்படியோ, அப்படியே மனுமகனுடைய வருகையுமிருக்கும். பிணம் எங்கெங்கே உண்டோ, அங்கேயே கழுகுகளும் ஒன்றாய்க்கூடும். ஆனால், அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியனும் இருளச் சந்திரனும் தன்னொளி கொடாதிருக்க, நட்சத்திரங்களும் வானத்தினின்று விழ, வானமண்டலத்தின் வல்லமைகள் அசைக்கப்படும். அப்பொழுது மனுமகனுடைய அடையாளம் வானத்திற்காணப்படும்; அப்பொழுது பூமியிலுள்ள சகல சாதிசனங்களும் புலம்புவார்கள். மனுமகன் வானமேகங்களின் மேல் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் வருவதைக்காண்பார்கள். பின்னும்அவர் உரத்த தொனிக்கும் எக்காளத்தோடு தமது தூதரை அனுப்புவார். அவர்கள் வானமேல் எல்லைமுதற் கடைஎல்லைவரைக்கும் நான்கு திசைகளினின்றும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ஒன்றுசேர்ப்பார்கள். அத்திமரத்தைக்கொண்டு ஓர் உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; மூந்த இளங்கிளைகளுண்டாகி இலைகள் தழைக்கும்போது கோடைகாலம் சமீபித்திருக்கின்றதென்றறிகிறீர்கள். இவ்வண்ணமே, நீங்கள் இவைகளெல்லாவற்றையும் காணும்போது மனுமகன்வாசற்கதவுக்குச் சமீபத்திலிருக்கிறார் என்றறியுங்கள். இவைகளெல்லாம்சம்பவிக்குமட்டும் இச்சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாகவேஉங்களுக்குச்சொல்லுகிறேன். பரலோகமும் பூலோகமும் ஒழிந்துபோம்; என்வாக்கியங்களோ ஒழிந்துபோகா என்று திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## விளம்பரம்

வடமாகாண ஏசண்டர் 1949-ம் ஆண்டு நொவம்பர்மாதம் 29-ந்தேதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணிவரைக்கும் தனக்குத் தேவைப்படும் 20,000 முழுக்கிடுகள் அல்லது அதற்குக்கூடிய கிடுகுகளை வேண்டுவதற்காகக் குறித்த (ரெண்டர்) விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப்பத்திரங்கள் அதற்குரிய மாதிரிப்பத்திரங்களில் யாழ்ப்பாண ஏஜண்டரிடம்பெற்று அதன்மூலம் தங்கள் விண்ணப்பங்களைத் தெரிவிக்கவேண்டும். எல்லாவிபரங்களும் யாழ்ப்பாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணக்கச்சேரியில் முன்தொகையாக ரூபா 25/- கட்டி அதன் பற்றுச்சீட்டைக்கொடுத்துக் குறித்த விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பி. ஜே. கட்சன்
வடமாகாணஏஜண்டர்

கச்சேரி.
யாழ்ப்பாணம், 1-11-49.

## சென் வின்சென்ற் டீ போல்சபை யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சென் வின்சென்ற் டீ போல் தருமசபைப்பந்திகளின் மூன்றும்கால் வருடப்பொதுக்கூட்டம் சென்ற ஞாயிறு (13-11-49) மாலை 5 மணிக்குச் சஞ்சூசையப்பர்கூட்டச்சாலையில் தனிச்சங்க அக்கிராசனர்திரு. R. J. போல்அவர்கள் தலைமையில் நடந்தேறியது.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள பந்திகள் ஆடி, ஆவணி, புரட்டாதிமாதங்களில் தாம்செய்துள்ள வேலைகளின் அறிக்கையையும் வரவுசெலவுக்கணக்கின் விபரங்களையும் சமர்ப்பித்தன. அதன்பின் வண. B. உவில்லியம் யேசுதாசன் சுவாமியார்: "தேவசிநேகமும் சென் வின்சென்ற் டீ போல்சபையாரும்" என்றோர் அரியசொற்பொழிவாற்றினர். தேவசிநேகம் பரிசுத்ததனமென்றும், பரிசுத்ததனமென்பது நன்மையில் பிசகாதிருத்தலென்றும் விரிவாய்விளக்கினர். கத்தோலிக்கசேவை கிறீஸ்துவின்சீவியத்தில் அவர்செய்துவந்தவேலையைப் பிரித்துக் கத்தோலிக்கர்செய்யும் தொண்டென்றுகூறி முடித்தனர். அதன்பின் தனிச்சங்ககாரியதரிசி திரு. P. சவிரிமுத்துஅவர்கள் சுவாமியார்ஆற்றிய அரியஉபந்நியாசத்திற்கு சபையின்பேரால் நன்றிகூறினர். திரு. S. பிரான்சீஸ் ஒவ் மேரி சிலகுறிப்புகள்கூறினர். அக்கிராசனரின் குறிப்புரைகளின்பின் வழமையான செபத்துடன் கூட்டம் குலைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**1949-ம் ஆண்டு ஐப்பசிமாசம்**

| | | |
|---|---|---|
| வெ | 18 | அர்ச். இராயப்பர் சின்னப்பர் கோவில் அபிஷேகத் திருநாள் |
| சனி | 19 | அர்ச். எலிசபேத்தம்மாள், வி. |
| ஞா | 20 | இஸ்பி. ஆகமனத். பின்வரும் 24-ம் ஞாயிறு — அர்ச். பெலிக்ஸ் தேவலோயி, கு. |
| திங் | 21 | தேவமாதா கோவிலில் காணிக்கை வைக்கப்பட்ட திருநாள் |
| செ | 22 | அர்ச். செசிலியம்மாள், க. வே. |
| புத | 23 | அர்ச். சாந்தப்பர், பா. வே. |
| வி | 24 | அர்ச். சிலுவை அருளப்பர், கு. |

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
கார்த்திகை மாசம் 17-ந் திகதி

## ஜெனறல் பிறங்கோ

ஸ்பானியாமட்டிலே பிரித்தானியும், அமெரிக்க ஐக்கியதேசமும் கொண்டுள்ள மனப்பான்மை இன்னதென்று இன்னுமே விளங்கிக்கொள்ளமுடியாத ஓர் பரமஇரகசியமாக இருந்துவருகிறது. இரும்புத்திரைநாடுகளிலும், ரூஷியாவிலுமே தனது குரூரத்தனத்தில் ஒப்புவமையற்ற சர்வாதிகாரத்துவஆட்சி இருந்துவருகின்றது என்பதை இவ்விருமேற்கு வல்லரசுகளும் ஒப்புக்கொள்ளுகின்றன. ஆனால், இந்த அரசாங்கங்களை இவைகள் அங்கீகரித்திருப்பதென்ன? ஸ்பெயினிலே பிறங்கோவின் அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுத்திருப்பதென்ன? இவற்றில்அடங்கிய நியாயமுறை எவர்க்குமே புலப்படுவதாயில்லையே.

பிரித்தானிய வர்த்தகஐக்கிய முதல்வர்களில் ஒருவரும், லண்டன்கவுண்ரி கவுண்சிலின் உபதலைவருமான திரு. பேர்ணட் சுலிவன் அவர்கள் பிறங்கோவின் ஸ்பானியாவிலே பரக்கச் சுற்றுப்பிரயாணஞ்செய்துவிட்டுத் திரும்பியதும் ஸ்பெயினிலே தொழிலாளர்கள் எவ்வளவோ சுதந்திரத்தோடும், நம்பிக்கையோடும், வாழ்ந்துவருவதாகவும், அந்நாடுமுழுவதிலும் செல்வச் செழிப்பின் அறிகுறி பலவற்றையும் தாம் கண்டதாகவும் பெரிதும் அபிமானத்துடன் பகிரங்கமாக எடுத்துக்கூறினர். இன்னும் சனநாயகநாடுகள்பல ஸ்பெயினிலிருந்து இரண்டொரு பாடங்கள் படிக்கவேண்டுமென்றும் அவர் கூறியிருந்தனர். அந்நாட்டை நேர்முகமாகத்தரிசிக்குமுன் அதைப்பற்றிய பட்சபாதகமான துர்அபிப்பிராயங்களால் நஞ்சூட்டப்பட்டிருந்தவர்களில் இவரும் ஒருவரென்பதை ஞாபகத்திற்கொள்வது நலமாகும். பாரபட்சமற்றவிதமாய்த் தெளிவாகவும், ஸ்திரமாகவும் தீர்ப்புச்செய்வதில்பிரக்யாதிபெற்ற நூலாசிரியரான திரு. காள்ரன் ஹேயிஸ்அவர்கள் சிலகாலமாக ஸ்பெயினிலே அமெரிக்க ஐக்கியதேச அரசின் ஸ்தானிகராயிருந்தவர். அங்கே இவர் அவதானித்தவைகளிலிருந்து பிறங்கோவின் ஆட்சியைப்பற்றிப் பெரிதும் சாதகமாகஎழுதி அதனைப் பாராட்டியிருக்கின்றார். இதே அபிப்பிராயத்தையே பெருந்தொகையான வேறநேகரும் துலாம்பரமாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.

என்றாலும் ஹிற்லருடன் பிறங்கோவை ஒரே நிரையில் வைத்து ஒன்றிப்பிடித்து அவருக்குப் பாதகஞ்செய்வதிலும் ஒருதொகையானோர் அழுங்குப்பிடியிலேநிற்கின்றனர். ஆனால், அன்று ஹிற்லரது விடாப்பிடியான நெருக்கிடையின்பேரிலே ஜெனறல் பிறங்கோ தமது நடுநிலைமைக் கொள்கையைக் கைவிட்டிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? அவ்விதம் அவர் மிக இலகுவில் கைவிடக்கூடியவராயும் இருந்தார். அவ்வாறு செய்து அந்தஅபாயகரமான சந்தர்ப்பத்திலே ஸ்பானியாவினூடாக ஜேர்மன் படைகள் தடைதாமதமில்லாது சுவாதீனமாகச்செல்லஅவர்பாதைவிட்டுக் கொடுத்திருந்தால் நேசஅரசுகளின் பாடு எத்துணை பெரும் நெருக்கடியாய் இருந்திருக்கும்? ஆனால், மற்றப்பக்கத்திலே பிறங்கோ அவர்கள் நேசஅரசுகளுக்குச் சாதகமாகத் தமது நடுநிலைக்கொள்கையையே மறந்துபோயினர் என்பதற்குப் பெருந்தொகையான சான்றுகளை எடுத்துக்காட்டமுடியும்.

இரண்டாவது உலகயுத்தத்துக்குமுன் ஜேர்மனியிலே அமெரிக்க ஐக்கியதேச ஸ்தானீகராக விளங்கியிருந்த திரு. ஜேம்ஸ் ஜெறுட்அவர்கள் "பிறங்கோவின் அரசாங்கம் அங்கீகரிக்கப்படவேண்டுமா?" என்று முன்னர் அமெரிக்கஐக்கியதேச ஸ்தானீகர்களாயிருந்த 26 பேரிடம் வினவியபோது, அவர்களில் 23 பேரும் 'ஆம்'என்று விடையளித்திருப்பதும் ஈண்டு நோக்கற்பாலது. அணுக்குண்டு இரகசியம் ரூஷியாவிடம் இருக்கிறதாமென்றசெய்தி பரந்தும் அமெரிக்க செனற்சபை அங்கத்தவரான திரு. ரொம்கொன்னலி அவர்கள் "நேசதேசங்களின் ஆசாரமுறைகளிலே அதற்குரிய தகுதியான இடம் இப்போதாவது ஸ்பெயினுக்கு அருளப்படவேண்டும்" எனப் பிரசித்தமாகக்கேட்டுக் கொண்டார். இவற்றிலிருந்து நீதியும் உண்மையும் தாபிக்கப்பெற்றுப் பிறங்கோவின் ஸ்பானியநாடு விரைவிலே ஐக்கியநாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுமென நம்பியிருக்கலாம்.

### நகைகள்கொடுத்த மாது

சென்றசனிக்கிழமைஇரவு ஒருஸ்திரீ யாழ்ப்பாணறெயிலில் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தபோது றெயில்திருடன்ஒருவன் அந்தஸ்திரி இருந்தபெட்டிக்குள் புகுந்து 2,525 ரூபா பெறுமதியான அவரின் தாலிக்கொடியையும், கழுத்துச்சங்கிலியையும்திருடிக்கொண்டு போய்விட்டான். மாகோவக்கும், கல்கமுவா ஸ்றேஷனுக்குமிடையில் இச்சம்பவம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திருமதி கதிரவேலுப்பிள்ளை தான் அந்தஸ்திரீ. அவர் அனுராதபுரம் பொலிசருக்கு இதுவிஷயத்தைப் புகார்செய்திருக்கிறார். இதுசம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். திருடப்பட்ட சாமான்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

### யாழ்ப்பாணத் துணை ஆயர் மடுப்பதி ஞானவொடுக்கத்துக்குச் சமுகந்தந்த ஆசிரியர்க்கு
அனுப்பியிருந்த
### அன்பிதழின் சாரம்சம்

"எமது அன்புநிறைந்த ஆசிரியர்களே! தனித்தனியே உங்களுடன் சம்பாஷிக்கத் தருணங்கிடைக்குமென்று உங்கள ஞானஒடுக்ககாலத்தைப் பேராவலுடன் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தேவசித்தம் வேறாயிற்று.

"சில நாட்களுக்குமுன் நாம் உங்களுக்குச் சொல்லியபடி, நீங்கள் எவ்வளவுக்கு உத்தமஆசிரியராயிருந்தீர்களோ, அவ்வளவுக்குக் கிறீஸ்துநாதரின் உத்தம அப்போஸ்தலர்களாகவுமிருந்தீர்கள்என்ற எண்ணந்தான் இவ்வளவு காலமும் நாம் தொண்டாற்றிவர நமக்குத் திடதைரியத்தைத் தந்துவந்தது.

"ஆனால், இப்பொழுதும் நாம் ஓர் பெரும்பாரமான சிலுவையைச் சுமக்கவேண்டுமெனத் தேவன் சித்தங்கொள்ளலாயினார். இப்பெரும் பாரச்சுமையை எவ்வண்ணம் சுமப்போம் என்று நாம் சயங்கும்போதெல்லாம் உங்கள் நினைவானது மீண்டும் திடதைரியத்தைத் தருகின்றது. எழுநூற்றைம்பது ஆசிரியர் எமது பாரத்தை எம்முடன்சேர்ந்து சுமக்க இருக்கிறார்களே; எழுநூற்றைம்பது அப்போஸ்தலர்கள் உலகஇரட்சகரின் ஆன்மஇரட்சணிய அலுவலைக் கொண்டுநடத்த இருக்கின்றார்களே; எழுநூற்றைம்பது ஆணும், பெண்ணும் தங்கள் பிதா முன்செல்ல, தாங்கள் பின்சென்று திருச்சபையின் போரைநடாத்த இருக்கின்றார்களே என்ற எண்ணங்கள் நமக்குப் புதியசக்தியைக் கொடுத்து, மனத்திடாரிக்கத்தை மேன்மேலும் அளிக்கின்றன.

"இந்த ஞானஒடுக்க நாட்களிலே நாம் உங்கள் மனதுகளிலே பதியச்செய்ய விரும்புவதுஎன்னவென்றால், எங்கள் சீவியத்தின் முக்கியநோக்கம் இரண்டாயிருக்கவேண்டுமென்பதே.

"முதலாவது: ஒவ்வொருவருடையவும் நிலைபரத்துக்குத்தக்கபடி சந்தோஷமான சீவியத்தை நடத்துவது. இதை வேறுவிதமாகச்சொல்லின் பணம், பொருள், சுகம், மரியாதை ஆகிய இவைகளை நீதிவழிப்படி தேடுவதற்கு முயல்வது.

"இரண்டாவது: சமாதானத்தைக் கொண்டுவருபவரே (செய்பவர்) பாக்கியவான்கள். "நமது பிதா எப்படிப் பரிசுத்தமாய் இருக்கிறாரோ, அப்படிநீங்களும் பரிசுத்தமாயிருங்கள்" "நானே திராட்சக்கொடி, நீங்கள் அதன் கிளைகள்" "எவன்என்னை நேசிக்கிறானோ, அவன் எனது கற்பனைகளை அனுசரிப்பான்." இவ்வித தேவவார்த்தைகளும், வேறுபலவும் ஞானஸ்நானம் பெற்ற எங்கள் சீவியத்துக்கு, வேறு ஒருபெரும் முக்கியநோக்கம் இருக்கவேண்டுமென்பதை மிகவும் துலாம்பரமாய் விளக்குகின்றன. ஆனதினால் விசேஷமாக ஆசிரியராகிய நீங்கள், உலகஇன்பங்களைத் தேடுவது மாத்திரமல்ல, நீங்கள்ஒவ்வொருவரும் கிறீஸ்துநாதரின் அப்போஸ்தலனாய், திருச்சபையின் தீபமாய்விளங்க வேண்டியதே பிரதானமானது.

"ஆகையால், நீங்கள் அனைவரும் "கிறீஸ்துநாதரின் தொண்டர்களாவோம் என்ற தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அவரின் அலுவலே உங்கள் அலுவலாயிருக்கட்டும். அவருடைய இராச்சியம் பெருகுவதே, உங்கள் உழைப்பாயிருக்கட்டும். உங்கள் பிள்ளைகளிடத்தும், உங்களுடன்சேர்ந்து நடமாடுவோரிடத்தும் கிறீஸ்துநாதருக்காக ஏதாவதுஒன்று செய்யாதநாள் இல்லாதிருப்பதாக.

"என்ன கருமமும் உங்கள் உயிரைப்போல் அருமையாயிருந்தபோதிலும் எங்கள் ஆண்டவரின் கருத்துக்கு முந்திவர விட்டுவிடாதீர்கள். திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள பிள்ளைகளாயிருங்கள். ஏனெனில், திருச்சபையின்றிக் கிறீஸ்துநாதரில்லை. உங்கள் ஆயனும், குருமாரும் உங்கள் வழிகாட்டிகளாயிருக்கக்கடவார்கள். அவர்களுடைய குறைகுற்றங்களைப் பாராட்டிக் காலங்கழிப்பவர்களுடன் பங்குபற்றாதீர்கள். அவர்களிலும் குறைகுற்றங்களுண்டு. ஆனால், உங்கள் ஆயனிடமிருந்து நற்புத்தியையும், தைரியத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அக்குற்றங்களை நிவிர்த்திசெய்வதற்கு உங்கள் பிதாவால் முடியாதிருந்தால் ஒரு பிள்ளை தன் தந்தையின் குற்றங்களைக்கண்டு மனம்வருந்துமாப்போல் மனம் வருந்தித் தேவசித்தமிதுவேயென்று மனச்சாந்தியாயிருங்கள்.

"எமது மன்றாட்டமும், கரிசனையும் உங்கள்மட்டிலே நாளாந்தம்கூடிக்கொண்டு வருகின்றது. நீங்கள் எப்படி என்ஞான்றும் கிறீஸ்துநாதரின் அப்போஸ்தலராயிருக்க வேண்டும் என்பதைப்பற்றி மாத்திரம் சொன்னோம். ஓர் ஆசிரியர் அனுசரிக்க வேண்டிய புண்ணியங்களைப் பற்றி ஞானஒடுக்க பிரசங்கியாரான வண. அகஸ்ரீன்சுவாமியவர்களும், அதிவண. ஜெனறல் மனேச்சர்சுவாமியவர்களும் பேசியிருப்பார்கள்.

"எமது அன்பார்ந்தமக்களே! கிறீஸ்துநாதரின் இராச்சியத்திலே தொண்டாற்றுவதற்குக் கிறீஸ்துநாதரும், அவருடைய ஆயர்களும், உங்களுடன் இருக்கிறார்கள் என்ற துணிகரத்தோடு செல்லுங்கள். அதிசீக்கிரத்தில் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியேகண்டு உங்கள் தேவைகளை அறியவும், அளவளாவவும் தருணங்கிடைக்குமென நம்பியிருக்கின்றோம்."

### றிக்ஷோ தொழிலாளர்சங்கம்

வடஇலங்கை றிக்ஷோதொழிலாளர் சங்கக்கூட்டம் அதன்சங்கத்தலைவர் திரு. ஆர். துரைராசசிங்கத்தின் தலைமையில்நடைபெற்றது. தொழிலாளர்களுக்கு வருங்காலத்தில் ஏற்படப்போகும் கஷ்டங்களைப்பற்றியும் றிக்ஷோத்தொழிலாளர்கையாளவேண்டியமுறைகள்பற்றியும் அவர்விரிவாக எடுத்துக்கூறினார். திருவாளர்கள்: பி. நாகலிங்கம், கே. செல்வராஜன், எச். எவ். அரசரத்தினம், திருநாவுக்கரசு முதலியோர் பின்புபேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்மீசாம்

## எமது குடும்ப நாள்

அர்ச். சவேரியார்திருநாள் வருகின்றது. கார்த்திகை மாசம் 24-ந் திகதி நோவனைகள் ஆரம்பமாகி மார்கழிமாசம் 3-ந்திகதி 7-30 மணிக்கு நடைபெறும் பாடற்பூசையுடனும், சுற்றுப்பிரகாசத்துடனும் திருநாள்முடிவாகிறது. தமது பெயர்கொண்ட அர்ச்சியசிஷ்டரின் ஆலயத்தில் வெகுகாலமாகக் கடைசி வேஸ்பர் கொண்டாடிக்கொண்டுவந்த திரு. பிரான்சீஸ்பிள்ளை அவர்கள் கூடிய ஊக்கத்துடன் திருநாளைச் சிறப்பிப்பார். அன்று உண்மையாகவே ஒரு குடும்பநாள். இந்தத் தாய்மாத்தில் நின்று கிளைத்த 37 கோவில்களிலுமிருந்து ஆட்கள்மழைகாலமாயினும் இங்குவந்துகூடுவார்கள். இவர்கள் கும்பல்கும்பலாக இருந்து சமைத்துச்சாப்பிடுவதைப் பார்ப்பதும் ஒருசந்தோஷந்தான். யாழ்ப்பாணத்திலிருந்தும் அயலூர்களிலிருந்தும் தங்கள்சவேரியாரை இம்மீசாமின்உபகாரிகள் தேடிவருவார்கள். தூரத்திலுள்ளோர் தங்கள்தேட்சணையுடன் அனுதாப கடிதங்கள் எழுதிஅனுப்புவார்கள். இம்மீசாமில்தொண்டாற்றிய பல குருமாரும் ஒருங்கேவந்து இங்கு கூடுவார்கள். பண்டைக்காலத்திலே அர்ச். சவேரியார் இவ்விடத்தில் கால் மிதித்தார்; ஆதலால்இது பரிசுத்தபூமி என்பார் எத்தனையோபேர்! ஞானப்பிரகாசர்சுவாமியாரின் அருஞ்செயல்களை எடுத்தோதுவோர் அநேகர்! உயர்ந்ததோற்றமும், காம்பீரபுன்முறுவலும் கலந்தவதனத்துடன் வருவாரையெல்லாம் அன்புடன்வாவேற்று, எல்லோர்க்கும் இன்பமொழிகள்கூறிய பிதாவைக்காணேனே! மறைந்ததே மணிவிளக்கு!! தகப்பனில்லாத வீடு போலாச்சுதே!!! என்றெல்லாம் ஆகுலசோபமுற்றோரைக் கண்டு சென்றவருடம் என்மனம்உண்மையாகவே அருட்சிகொள்ளலாயிற்று.

மட்டுவில், அர்ச். சூசையப்பர் கோவில்: இது ஒருகாலத்தில் பிரபல்யமான ஓரிடமாயிருந்து—ஓர்பெரிய ஆங்கில பாடசாலைஇருந்ததாக முன்னோர்சொல்லுவர். இம்முறை இங்கு திருநாள் கொண்டாடப்பட்டபோது, மட்டுவிலுக்குச்சேர்ந்தவர்களாய் இந்த மீசாமின் பலபாகங்களிலும் பரந்திருக்கும் கிறீஸ்தவர்களில்அநேகர் தங்கள் உரிமைதப்பாது வந்துகூடினர். திருநாள்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆனால், திருநாள்நாட்களில் குருவானவர்பட்டபாட்டை என்னென்று சொல்வது? கொட்டில்அகோரம் தாங்கமுடியாது காட்டுப்பற்றையைவெட்டி ஒரு நாவல்மரத்துக்குக்கீழேயே பகலின் கூடியபாகத்தைச்செலவிட்டார். வீட்டு வெக்கையிலும், காட்டுவெக்கை குறைவாயிருக்கவில்லை. திருநாளும்முடிந்தது. சுவாமியாரும் பேசுவதுக்குத்தானும் தஞ்சமற்றவரானார்.

பிற்கதவு, அவருக்குவயசு 70 வரையிலிருக்கும். இவர்ஏழுவருடங்களுக்கு முன்தொடக்கம் தமது பாரியாரான பாட்டியுடன் கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார்கோவிலுக்குப் போய்வருவார். பாட்டியார், அப்பா! நாங்கள் இருபேரும் எங்களை அர்ச். அந்தோனியாருக்கு அடிமைகளாய் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுவர். இருவருடங்களுக்குமுன் இவ அர்ச். அந்தோனியாரின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு மரித்து விட்டா. அதன்மேல் பாட்டனார் தனித்திருந்தும் அர்ச். அந்தோனியார்கோவிலுக்குப் போகும்வழக்கத்தை விட்டுவிடவில்லை. அங்கு இவர் என்னை ஒருசெவ்வாய்க்கிழமைகண்டு அர்ச். அந்தோனியாருக்கு அடிமையாகித் தாம்மரிக்கத் தமக்கு உதவிசெய்யவேணுமென்று கேட்டார். அப்போ, நான்சிறுபிள்ளையாய் இருந்தபோது அர்ச். அந்தோனியார்பத்தியை வளருங்கள்; ஏனெனில், அவர்அநேகருக்கு மோட்சஇராச்சியத்தின் பிற்கதவாய்இருக்கிறார்என்று வண. தோமஸ்சுவாமியார் சொன்னது எனதுஞாபகத்தில்இருந்துவந்தது.

இதற்குத் தீர்ப்புச் சோல்லுவது ஆர்! ஒருபார்சலில் ஏழுசெபமாலைகளும், ஒருகடிதமும் இருந்தன. கடிதத்தின்சாரம்: "சுவாமி! தகப்பனரின்சம்பளநாளிலே வீட்டில் வெகுகுதூகலிப்பு. ஏனெனில், தகப்பனர் ஒவ்வொருவருக்கும் தன்தன் இஷ்டப்படி செலவழிக்கக் கொஞ்சம்காசுகொடுப்பார். தகப்பனர் வீட்டுக்குவந்ததும் எனதுஇரண்டாம்மகன் ஓடிப்போய் "பப்பா! இராசநாயகம்சுவாமியாருடைய பிள்ளைகளுக்கு ஒருசெபமாலை வாங்கிஅனுப்ப ஒருரூபா தாருங்கள்" என்றான். உடனேகிடைத்தது. மற்றப் பிள்ளைகளுமே தாங்களும் ஒவ்வொரு செபமாலைவாங்கியனுப்பக்காசுகேட்டுப் பெற்றுக்கொண்டார்கள். நானும் "என்னுடையபெயராலும் ஒரு செபமாலை அனுப்பத் தம்பியிடம் ஒருரூபா கொடுத்துவிடுங்கள்" என்றேன். "அதுக்கென்னப்பா! என்னுடையபெயராலும் ஒன்று" என்று இரண்டுரூபா கொடுத்தார். இந்தச்செபமாலைச் சந்தடியைப் பார்த்துக்கொண்டிருந்த என் மூத்தமகன், "பப்பா! எனக்குநீங்கள் காசுதரவேண்டாம். அன்றைக்குப் புஸ்தகத்துக்கென்று தாங்கள்தந்த காசில் ஒருரூபா எடுத்து ஞானசவுந்தரிபடம் பார்க்க வைத்திருந்தேன்; அந்தக்காசைக்கொண்டு செபமாலைநானும் வாங்கி அனுப்புவேன் என்றான். இதற்குள் வரும் ஏழுசெபமாலைகளையும் பெற்றுக்கொண்டு என்னையும், என் குடும்பத்தாரையும் ஆசீர்வதியும்.

(தாயின்கையொப்பம்)

அடுத்தநாள், எனதுபாடசாலை ஒன்றுக்குப்போய்ச் சின்னக்குறிப்பிடத்திலுள்ள எல்லாச்செபங்களும், பதினைந்துகாரணிக்கங்களும், மோட்சபாதையிலுள்ளமுறைப்படி செபமாலை சொல்லும்முறையையும்அறிந்தஇரண்டு பிள்ளைகளுக்குப் பரிசாக இரண்டுசெபமாலைகளைக் கொடுத்தேன். தினமும் குடும்பமாகச்செபமாலை சொல்லிவரும் இருவருக்கு இரண்டுசெபமாலை. பின்பு இந்தக்கேள்வியைக்கேட்டேன். இந்தச்செபமாலைகள் கொடுத்தவர்களில் ஆருக்குக்கூடியபலன்?

### பெற்ற விடைகள்

1-வது மாணவன்: 2-ம் மகனுக்கு. ஏனெனில், அவர் முன்மாதிரிகைகாண்பித்தார்.

2-வது மாணவன்: தகப்பனுக்கு. ஏனெனில், மனஞ்சலியாமல் காசுகொடுத்ததுக்காக.

3-வது மாணவன்: தாய்க்கு இந்த நல்லபழக்கத்தைப் பழக்கினதுக்காக.

4-வது மாணவன்: பரித்தியாகத்துடன் காணிக்கை ஒப்புக்கொடுத்ததுக்காக.

இப்போது அந்தப்பாடசாலையில் ஒவ்வொருமாணவனும் ஒருஉண்டியற்பெட்டி வைத்திருந்து தங்கள்சின்னச்சதங்களைச் செபமாலைவாங்குவதற்காகச் சேகரிக்கிறார்கள். ஆனல், பனிப்பெய்து குளம்நிரம்புமா?

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

எனது விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
அர்ச். சவேரியார் கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

சஞ்சூசையப்பர் தாசர்களுக்கு

## ஓர் விண்ணப்பம்

இதைக் கண்ணுறும் அரிய சகோதரமே! 1873-ம் ஆண்டு சம். பிலிப்புநேரியார் சபையைச் சேர்ந்த கோவைக்குரவராம் அறுக்காஞ்சிநாதர் என்பவரின் என்புகள்கொண்டு வந்து அடக்கப் பெற்றதும், இற்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன் பட்டமரம் துளிர்க்கப் பெற்றுப் புதுமையுடன் விளங்கியதுமான அளவெட்டி சஞ்சூசையப்பர் கோயில் அழிந்தொழியும் பக்குவநிலையில் இருப்பதைக்கண்ட பலரும், பங்குக்கிறீஸ்தவர்களும், கோயில் அதிகாரிகளும் அதைப் புதுப்பிக்கும் நோக்கம்கொண்டு திருப்பணியைத் தொடங்கிவிட்டார்கள். மேற்படி கோவிற்கிறீஸ்துவ குடும்பங்களின் தொகையோ விரல்விட்டெண்ணலாம். வெறுங்கை முழமிடுமா?

ஆகையால் திருக்குடும்பப் பாதுகாவலராம் அர்ச். சூசையப்பரின் ஆலயத்தைக் கெதியில் கட்டி முற்றுப் பெறுவிக்கத் தங்களால்இயன்ற பொருளுதவியை எமக்கு அனுப்பிவைத்து (இளவாலைக் கட்டளைக் குருவானவருக்கு) அர்ச்சியசிஷ்டரின் ஆதரவையும் அன்பையும் பெறத் தவருதீர்கள். எவ்வித சிறிய தொகையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

"பல துள்ளி பெரு வெள்ளம்"

J. F. Xavier, O. M. I.
கட்டளைக்குரு
இளவாலை.

## சுதேசவர்த்தமானம்

### ஊர்காவற்றுறை பட்டினசங்கம்

இந்நகரத்தை இரண்டாவதுவகுப்பிலிருந்து முதலாவதுவகுப்புக்கு உயர்த்தும்படி ஸ்தலஸ்தாபனசேவிஸ் கொமிஷனுக்கு விண்ணப்பஞ்செய்யப்பட்டிருக்கிறது. ஊர்காவற்றுறைக்குக் குழாய்த்தண்ணீர் கொடுப்பதற்கு மந்திரிசபையால் 3,95,000 ரூபா சன்மானிக்கப்பட்டிருக்கிறது. 1950-ம்ஆண்டு ஆவணிமாதத்தில் ஊர்காவற்றுறைமக்களுக்கு தெருக்குழாய்கள்மூலம் தண்ணீர்கிடைக்கக்கூடியதாக இருக்கும். ஆனல் இத்திட்டம் முழுத்தேவையையும் பூர்த்திசெய்யுமென்பது சந்தேகமென்று சொல்லப்படுகிறது. ஊர்காவற்றுறைக்கு மின்சாரவிளக்குகள் அமைக்கும்நோக்கமாகப் புள்ளிவிபரங்கள் எடுக்கப்பட்டன. பட்டினசங்க எல்லையை விஸ்தரிக்கும் நோக்கமிருந்தது. ஆனல் இப்பொழுது அது பின்போடப்பட்டிருக்கிறது. இங்குள்ள சனசமூக நிலையத்தின் முன்னேற்றம் சிறுசச்சரவுகள்காரணமாகத் தடைப்பட்டிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியிலிருந்து ஆறுமாதங்களுக்குமுன் 10,000 ரூபா செலவில்கட்டப்பட்ட இந்நிலையம்மூடப்பட்டுக்கிடக்கிறது. பிரயாணிகளின் போக்குவரத்துக்கு ஊர்காவற்றுறைத் துறைமுகத்தைத் திறந்துவைப்பது இன்று ஒருசிக்கலான பிரச்சினையாக இருக்கிறது. இவ்விஷயம்பற்றி விண்ணப்பம்செய்திருக்கிறது. ஊர்காவற்றுறையின் எதிர்காலம் இத்துறைமுகத்தைத்திறப்பதிலேயே தங்கியிருக்கிறது.

### மத்தியஆலோசனைச்சங்கம்

25 பேரை அங்கத்தவர்களாசக் கொண்ட இதுகாலவரை இருந்துவந்த வித்தியாசங்கம் வருகிறமார்கழிமாசத்திலே கலைக்கப்பட்டு அதனிடமாக மத்தியஆலோசனைச்சங்கம்ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இதுகாலவரை வித்தியாசங்கம் வித்தியாதலைவருக்கு மாத்திரமே ஆலோசனைகூறிவந்தது. ஆனல் புதியஆலோசனைச்சங்கம்கல்விக்கொள்கைவிஷயமாய்க் கல்விமந்திரியாருக்குஆலோசனைகூறுவதாய் இருக்கும். இவ்விதம்அவருக்கு ஆலோசனைகூறுதற்கென்று கல்வியின்பல்வேறு துறைகளிலும்நிபுணத்துவமும், விவேகமும்வாய்ந்தபேர்களைக்கொண்ட ஓர்மத்தியஆலோசனைச்சபையை நியமிக்குமாறு கல்விமந்திரியாரைவேண்டிச் சமீபத்திலேஅகிலஇலங்கைஆசிரியர்சங்கத்தில் ஓர்பிரேரணை அரங்கேற்றப்படலாயிற்று.

### புதிய கண்வைத்தியர்

சென்றசனிக்கிழமை கொழும்புவந்துசேர்ந்த வியன்னநகர் கண்வைத்திய நிபுணரான டக்றர் அண்டிரியஸ் பெஸ்ஸஸ்விக்டோரியா அவர்கள் கண்ஆஸ்பத்திரியில் கடமையாற்றுவார். இந்த ஆஸ்பத்திரியில்தங்கிச் சிகிச்சைபெற்றுவரும் பலநோயாளிகள் அவரின்பொறுப்பில் ஒப்படைக்கப்படுவர். டக்றர் லியோப்போல்ட் ஜெர்மர்என்ற மற்ற வியன்னநகர் நிபுணர் சிலகாலத்துக்கு அரசினர் பெரியஆஸ்பத்திரியில் கடமையாற்றுவார். பிற்பாடு வெளியூர் ஆஸ்பத்திரிஒன்றுக்கு மாற்றப்படுவார்.

நோய்கண்டு யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் வருந்தும் தமது அருமைத் தாயார் சுகமடையமன்றாடிக்கொள்ளுமாறு தம்முடைய இனபந்துக்களையும், அன்பர்களையும் வண. B. E. அல்பிறெட்சுவாமி அவர்கள் பரிவாகக்கேட்டுக் கொள்ளுகின்றார்.

சம்பத்திரிசியார்கல்லூரி,
16-11-49. யாழ்ப்பாணம்.

### சுவிஸ்-இலங்கை வர்த்தகம்

இந்தியா, பாகிஸ்தான், இலங்கைமுதலியநாடுகளுக்கு சுவிஸ்வர்த்தககொமிஷனராகஇருக்கும் டக்றர் ஈ. டபிள்யு. டட்ஸ்லர் சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இலங்கைவந்துசேர்ந்தார். உத்தியோகதோரணையில் அவர் இங்கு முதன்முதலாக விஜயஞ்செய்திருக்கிறார். இலங்கைக்கும் சுவிற்சர்லாந்துக்குமிடையிலுள்ள வர்த்தகத்தொடர்புசம்பந்தமான விஷயங்கள்பற்றி அவர் வர்த்தகமந்திரிகாரியாலய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். தேயிலை, கொப்பரு, தேங்காயெண்ணெய், கொக்கோமுதலியனவே சுவிற்சர்லாந்துக்கு ஏற்றுமதியாகும் பிரதானசாமான்களென்றும் சுவிற்சர்லாந்திலிருந்து பெருந்தொகையானகடிகாரங்கள் இறக்குமதியாகின்றன என்றும் அவர்தெரிவித்தார். பிரித்தானியைப்போல் சுவிற்சர்லாந்து தனது நாணயமதிப்பைக் குறைத்துக்கொள்ளவில்லையென்றும் அதன்நாணயச்செலாவணி மிகவும்பலம்பொருந்தியதாக இருக்கிறதென்றும் அதனல் அதன் நாணயமதிப்பைக் குறைக்கவேண்டிய அவசியம் சுவிற்சர்லாந்துக்கு ஏற்படவில்லையென்றும் அவர் கூறினர்.

பிறேசில்அரசாங்கம் பரிசுத்த வருடத்தைமுன்னிட்டுத் தன்தேசத்திலுள்ள பலகைதிகளுக்கு மன்னிப்பளிக்கத் தீர்மானித்துள்ளது. இத்தாலியஅரசாங்கமும் தேசீயகைதிகளுக்கும், சாதாரண குற்றவாளிகளுக்கும் தண்டனைநீக்கம்செய்வதுபற்றி ஆலோசனைசெய்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு துருவங்கள்

[வாழ்க்கைச்சித்திரம்]

(ஜே. தஸ்நேவிஸ் பர்ணாந்து)

மணி மாலை 5. கதிரவன் மேற்கே சாய்ந்துகொண்டிருந்தான். மாணவர்கள் தங்கும் ஒருவிடுதி. முன்னாலுள்ள வீதியிற்செல்லும் மக்களின் ஆரவாரம். கடைகளில் சாமான் வாங்குவோரின் சப்தம். பூக்கடைக்காரர்களுக்கும், வாங்கும் மகளிருக்கும் நடக்கும்உரையாடல். கார்களின் விடாதஇரைச்சல். இடையிடையே குதிரைவண்டிக்காரர்களின் 'ஹை' என்றகுரல். நிலைக்கு வரும் புகைவண்டிகளின் 'ஓ' என்ற ஒலி. இவ்வளவு ஆரவாரத்தில் மாணவர்கள்எவ்விதம் படிப்பார்கள். ஆகவே அவர்கள் வெளிமுற்றத்தில் இருந்துகொண்டு மாணவஉலகப் பிரச்சினைகளையும், வரப்போகும் தேர்வைப்பற்றியும் வடிகட்டும்முறையை (Selection) எதிர்த்துத் தாங்கள்செய்து வெற்றிபெறாத வேலைநிறுத்தத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால், ஒரேயொரு மாணவன்மட்டும் அதிலே கலந்துகொள்ளாமல் தன் அறையில்உள்ள புழுக்கத்தையும் பொருட்படுத்தாமல் படித்துக்கொண்டிருந்தான். வயது 22 இருக்கும். நல்ல உயரமும், திடகாத்திரமுமான உருவம். சற்றே சிவந்தமேனி. சிறிது எடுப்பானநாசி. ஒழுங்காகப் பின்னல் சீவப்பட்டு நடுவகடுஎடுத்ததலை. அவன் முகம் வாழ்வின் பலகோணங்களில் பலதுன்பங்கள்அடைந்தவன் என்னைக் காண்பித்தது. என்றாலும் அவன் முகத்தின் களை, இன்பமாக வாழ்ந்தவன்என்பதைத் தெளிவாகக் காட்டியது.

திடீரென வெளியில்கேட்ட அரவத்தால் பாதிக்கப்பட்டு அறையைவிட்டு வெளியேவந்தான். ஒரு றெயில்வே போட்டர்: "இங்கே புதுவூர்ப்பையன் இருக்கிறானா?" என்று கேட்டுக்கொண்டிருந்தான். "ஏன்? நான்தான்" என்று அம்மாணவன் பதிலுரைத்தான். "உங்கள்அப்பா றெயிலடியில் இருக்கிறார்கள், உடன்வரவேண்டுமாம்" என்று கூறவே யோசேப்(அம்மாணவன்பெயர்) போட்டரோடு புறப்பட்டான். புகைவண்டிநிலையத்தை யடைந்து, தன் தந்தையைவணங்கினான். அவர்முகத்தில் யாதொரு அமைதியுமில்லை. தன் தந்தையின் முகமாறுபாட்டைக்கண்டதும் தனக்குக் கேடுவரும்என்று அப்பொழுதே அவன் யூகித்துக்கொண்டான். போட்டர் பெட்டியை 2-வது வகுப்புப்பெட்டியில் கொண்டுபோய் வைத்தான். யோசேப்பும் தன் தந்தையைத்தொடர்ந்து றெயில் ஏறினான். ஐந்துவிநாடி யாதொரு பேச்சுமில்லை. பிறகுஅவன் தந்தை பேசத்தொடங்கினார். "நீ அனுவசியமான இடங்களுக்கெல்லாம் கடிதம்எழுதுகிறாய். ஒழுங்காகஇருக்கிறதானால்இரு. அல்லது எங்காவது தொலைந்துபோ. உன்னால் எனக்கு ஏற்பட்ட அவமானமும், துன்பமும், பணச்செலவும் போதுமென்றாகிவிட்டது. இப்பொழுது விபரமாகப் பேச நேரமில்லை. எல்லாம் நான் திரும்பிவந்தபிறகு பார்த்துக்கொள்ளுகிறேன். உன்நடத்தை நன்றாக இல்லை. ஒழுக்கக்குறைவாக இருந்தால் என்வீட்டுவாசலில் காலெடுத்து வைக்காதே. உன்னைப் பார்ப்பதற்கே எனக்குப்பிரியமில்லை. என்முன் நிற்காதே. போ. கடவுள்கொடுத்தார், கடவுள்உயிரோடேயே எடுத்துக்கொண்டார்என்று மனந்தேறிவிடுவோம்போ" என்று ஆத்திரமும், கோபமுமாகப் பேசினார்.

யோசேப் யாதொருபேச்சுமின்றிக் குனிந்துகொண்டே விறுவிறென்று கீழேஇறங்கினான். தந்தைக்கு மகன் செலுத்தவேண்டிய மரியாதையையும் செலுத்தாமல் இறங்கினான். மகன் கெட்டழியக்கூடாதெனத் தந்தை கடிந்துகொண்டார். ஆனால், மகனோ அதைவிரும்பாதவன்போலக் கீழே இறங்கிநடந்தான். அவன் கீழேஇறங்கவும் றெயின்புறப்படும்நேரம் சரியாய் இருந்தது. புகையைக்கிளப்பிக்கொண்டே அதுநகர்ந்தது. இருஉயிர்களின் இருதயத்தில் எழுந்தகொந்தளிப்பையும்பாராது புறப்பட்டது. ஒருஉயிர் புகைவண்டியினுள். மற்றொன்று புகைவண்டிநிலையத்தில். இருஇருதயத்தில் இருவிதஎண்ணங்கள். இரண்டும் இருதுருவங்கள். யோசேப் தன்னைவிட்டு அந்தத்துருவம் விலகிவிலகிச்செல்வதை உணர்ந்தான். தன் தந்தையைவிட்டுப் பிரிவதைஉணர்ந்தான். அவன் தந்தையும்......

விறுவிறென்று தன் அறைக்குவந்தான். மாணவர்களின் 'மகாநாடு' இன்னமும் முடியவில்லை. அவன் தனது முகத்திலுள்ள ஏக்கத்தையும் வருத்தத்தையும் மறைத்துக்கொண்டு, புன்னகையைவரவழைத்து உள்ளே நுழைந்தான். "பெற்றதாய்தந்தை, பிறந்த பொன்னானஊர், உற்றஉடன்பிறந்தார் எல்லோரையும் மறந்துவிடு. நீவேறு. அவர்கள்வேறு. அவர்கள்வாழப்பிறந்தவர்கள். நீ வாடப்பிறந்தவன். நீ ஒருமுனை. அவர்கள்வேறுமுனை" என்று அவன்மனம்சொன்னது. தன் தந்தையை மதியாது மிருகம்போல் நடந்துகொண்டதை நினைத்தான். அதைப் பெருமையாகநினைத்தான். அநுபவமில்லாதவன். இளமையானமூர்க்கம். அறியாமை அவனைஅவ்விதம் நினைக்கத்தூண்டியது. வெறும் புத்தகப்பூச்சிதானே அவன். நாட்கள்உருண்டன. கட்டுத்தறிபட்ட காளைபோல் சுற்றினான்.

* * *

யோசேப் நல்லகுடும்பத்தில் உதித்தவன். அவன் தந்தை மதிப்பர்கவாழும் ஒருஉத்தமகத்தோலிக்கர். தன்பிள்ளைகளை நல்லமுறையில்பழக்கப் பலகட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார். குழந்தைகளின் எதிர்காலமுன்னேற்றத்திற்காக மிகவும் பாடுபட்டுப் படிக்கவைத்தார். யோசேப் தலைமகன். படிப்பில்கெட்டிக்காரன். தற்பொழுது சர்வகலாசாலையில் பி. ஏ. வகுப்புப படித்துக்கொண்டிருந்தான். அவன்தாய் பக்தியுள்ள ஓர்மாதரசி. அமைதியும், அன்பும் அவள் அணிகலன்கள். பொறுமையின் சிகரம். தன்பிள்ளைகளுக்காகப் பல துன்பங்கள்அநுபவித்தவள் அந்தஅருங்குணவதி. இந்தஇரு உத்தமர்களுக்கும் பிறந்தவன்தான் ஜோசேப். இவன் ஆடம்பரப்பிரியன். நல்லகுணங்களும் திறமையும்இருந்தாலும் ஒருசிலகெட்ட குணங்களும் அவனிடம்இருந்தன. அதற்காக அவன்பலமுறை துன்பப்பட்டிருந்தான். தந்தையின் கோபத்திற்குப் பலமுறை ஆளாகியிருக்கிறான். சொல்லவேண்டுமானால் அவன்உடன் பிறந்தவர்களைவிட அவனே அதிகம் உதைவாங்கியவன். ஆனால், அதிக சௌகரியத்தோடுவாழ்ந்தவனும்அவன்தான். பாடசாலையில் சிறுவயதிலேயே குறும்புக்காரனாக இருந்தான். அதே குறும்பு பாடசாலையிலிருந்து கல்லூரிக்குவந்தபொழுதும்அவனைத்தொடர்ந்தது. ஆனால், படிப்பில் கெட்டிக்காரன். "பையன் குறும்புக்காரன், ஆனால் நல்லமூளையுள்ளவன்" என்று எல்லா ஆசிரியர்களும் சொல்வதுண்டு. இந்தச்சேட்டிபிக்கேற்றான் தன்மகனைப் பட்டதாரி யாக்கவேண்டுமென்று அவன்தந்தையைத் தூண்டியது. ஆகவேஅவர் அவனை பி. ஏ.க்குப் படிக்க வைத்தார். அவன் பலதுன்பங்கள்செய்தாலும்.

ஜோசேப் பி. ஏ. படித்துக்கொண்டிருக்கும்பொழுது தன் தந்தையின் வியாபாரஅலுவலாக விடுமுறைநாட்களில் பக்கத்துஊருக்குப் போவதுண்டு. அச்சமயத்தில் அங்குள்ள ஒருபெண் மீது அவனுக்கு அன்புஏற்பட்டது. முதலில் சகோதரஅன்பாகத் தளிர்த்தது. காலத்தின்நீராலும், உரத்தாலும் காதலாக மலர்ந்தது. பெண் நல்ல அழகும், குணமுங்கொண்டவள். ஒருமுறையில் நெருங்கிய சொந்தக்காரி. ஆனால் அவள்ஏழை. "கோத்திரம் பார்ப்பது அந்தக்காலம், குணத்தைப் பார்ப்பது இந்தக்காலம்" என்றதற்கொப்ப ஜோசேப் அவளிடம் தன்னைப் பறிகொடுத்தான். ஜோசேப்ஒன்றில் அவளுக்கு மாலையிடுவேன் அல்லது மரணத்திற்கு மாலையிடுவேன்என்று சூளுரைத்தான். அவளும் அவனையே நம்பினாள். இந்த இரு சிட்டுகளின் போக்கு பெற்றபெரியபறவைகளுக்குத் தெரிந்துவிட்டது. அதன் விளைவு யோசேப்வீட்டை மறக்கநேரிட்டது.

(தொடரும்)


புஷ்டியான குழந்தைகளை விரும்பாதவர்கள் கிடையாது

இவர்கள் "லெக்டோஜனில்" வளரும் குழந்தைகள்



பலப்பிட்டியிலுள்ள குழந்தை என். யு. ஏ. டி சற். வயது 12 மாதங்கள்

"இலங்கைக் குழந்தைகளின் உணவு"

என்று அழைக்கப்படும் லெக்டோஜனின் புகழை நிலைநாட்டும் பற்பல காரணங்களுள் இக்குழந்தையின் வசீகரத்தோற்றம் முதன்மை வாய்ந்தது.




# லெக்டோஜன்

எல்லா ஸ்டோர்களிலும் கூட்டுறவு டிப்போக்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது.


## மடாதிபதியாகிய பிரபுகுமாரன்

ஓதோ என்பவரின் பெற்றோர் மகப்பேறை விரும்பிச் செபதபங்களைப்புரிந்தும், விசேஷமாய்த் தேவதாயாருக்கு நேர்த்திப் பொருத்தனைகளைச்செய்தும் வந்ததன் பயனாய்ச் சருவேசுரன் இவரை அவர்களுக்கு அருளச்சித்தமானார். ஓதோ சிறுப்பத்திலே தானே புண்ணியவழியில் சுறுசுறுப்புடன் ஒழுகினார். இராசஅரண்மனை உத்தியோகத்திலே தம்மை அமர்த்துவதற்குத் தமது தந்தை எத்தனம்செய்வதை இவர் அறிந்து அதற்கு இணங்காமல், சருவேசுரனுக்கு ஊழியஞ்செய்யத் தீர்மானித்தார். இக்கருத்துடன் இவர் வேடிக்கை, விளையாட்டு, வேட்டை, நாடகம் ஆதியவைகளை வெறுத்து, தமது அறையிற் தனித்திருந்து செபதபங்களையும், ஒருசந்தி உபவாசங்களையும் புரிந்து சருவேசுரனோடு ஒன்றித்திருந்தார். நாளடைவிற் தமக்குண்டான விக்கினங்களையெல்லாம் நிவர்த்தித்து உலகத்தைத்துறந்து ஒருசந்நியாசமடத்தை ஏற்படுத்தினார். இவருடைய சிறந்த புண்ணியங்களையும், தருமநடத்தையையுங்கண்ட அநேக துரைமக்கள் இவர் ஏற்படுத்திய மடத்தில்உட்பட்டுப் புண்ணியவழியில் ஒழுகினார்கள். ஒருநாள் ஓதோ என்பவர் செபத்தியானத்தில் ஆழ்ந்திருக்கையில் திவ்வியகர்த்தர் சிலுவையில் அறையுண்டமேரையாக இவருக்குத் தரிசனமானார். ஓதோ மடாதிபரின் அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றிக்கேள்வியுற்ற பரிசுத்த பாப்பானவர் இராசாக்களுக்கிடையில் உண்டான பகைவிரோதங்களைநீக்கி அவர்களைச சமாதானப்படுத்தும் தூதராக இவரை அனுப்பினார். இந்த மேலானவேலையில் இவர் அனுகூலமடைந்து அரசர்களாலும் பிரசைகளாலும் மிகவும் பாராட்டப்பட்டார்.

இவர் தமது சந்நியாசிகளை மிகத் திறமையாகப் பரிபாலித்து, மௌனத்திலும், ஏகாந்தத்திலும விசேஷவிதமாய் அவர்களைப்பயிற்றிப் புண்ணியவான்களாக்கினார். தமது சமாதான வேலையினிமித்தம் பிரயாணம் செய்கையில் வழியில்வியாதியாய் விழுந்து அர்ச்சியசிஷ்டராய் மோட்சசம்பாவனையைப் பெற்றுக்கொண்டார். இந்த அர்ச்சியசிஷ்டரின் திருநாளைக் கார்த்திகைமாதம் 18-ந்திகதி திருச்சபை கொண்டாடுகிறது

யோசனை: நாம் அர்ச். ஓதோவைப்போன்று சீவியகாலமெல்லாம் ஏகாந்தத்தையும், மௌனத்தையுங் கடைப்பிடித்துக் கடின தவங்களை இயற்றாவிடினும; மௌனமும், ஏகாந்தமும் நம்மைப் பாவங்களினின்று விலக்கும் என்பதை உணர்ந்து, நமது சீவியத்திலே இடையிடையேயாவது இரண்டொருதினங்களை ஏகாந்த மௌன தியானங்களிற் செலவிடுதல் நமது ஆத்துமத்துக்கு வெகு பிரயோசனத்தைப்பயக்கும் என்பதுதிண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினாவிடை

## — IV —

சுதனானவர் எங்கள் அவதரித்தவர்

### (4) கிறீஸ்துவின் சரித்திர உண்மை

73. யேசுநாதருடைய காலத்தில் இல்லாதவர்களாகிய நாம் அவர் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார், உத்தம சீவியத்தை நடத்தினார், அற்புதங்களைச் செய்தார் என்று எப்படி அறியலாம்?

அவை எல்லாத்துக்கும் சாட்சியாக இருந்த அப்போஸ்தலர்கள் தாங்களாக அல்லது தங்களுடைய சீஷர்கள்மூலமாக, எழுதிவைத்த புத்தகங்களிலிருந்து அறியலாம்.

"நமது மத்தியில் நடந்தேறிய விஷயங்களின் வரலாற்றை ஒழுங்குடன் எழுத அநேகர் முயன்றபடியால், துவக்கமுதல் கண்ணால் கண்டவர்களும், வாக்கியத்தைப் பிரசங்கிக்கிற உத்தியோகமுள்ளவர்களுமாய் இருந்தவர்கள் நமக்குக் கையளித்தபடியே, ஆதிமுதல் யாவற்றையுங் கவனமாய்க் கற்றுக்கொண்ட நானும் ஒழுங்குடன் எழுதுவது நலமென்று எனக்குத் தோன்றிற்று"—லூக். I. 1-3.

"அந்தச் சீஷனே இவைகளைக் குறித்துச் சாட்சிசொல்லி, இவைகளையும் எழுதினவன். யேசுநாதர் சருவேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துநாதரென்று நீங்கள் விசுவசிக்கும் பொருட்டு இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன"—அரு. XXI. 24, XX. 31.

74. அப்படிப்பட்ட புத்தகங்கள் எவை?

மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர் எழுதிய சுவிசேஷங்களேயாம்.

75. அந்த நாலு சுவிசேஷங்களும் எப்போது எழுதப்பட்டன?

மத்தேயுவின் சுவிசேஷம் ஏறக்குறைய 41-ம்ஆண்டிலும், மாற்குவின் சுவிசேஷம் 42-ம் 50-ம் ஆண்டுகளுக்கிடையிலும், லூக்காசின் சுவிசேஷம் 61-ம் 63-ம் ஆண்டுகளுக்கிடையிலும், அருளப்பரின் சுவிசேஷம் ஏறக்குறைய 100-ம் ஆண்டிலும் எழுதப்பட்டன.

76. அவை உண்மையான சரித்திரங்களா?

ஆம். ஏனெனில் அவை குறிக்கப்பட்டவர்களால் எழுதப்பட்டவை என்றும், எழுதப்பட்டகாலந்தொட்டு இதுவரைக்கும் மாற்றமில்லாமல் காப்பாற்றப்பட்டவை என்றும், உண்மையான சம்பவங்களையே கூறுகின்றன என்றும் அத்தாட்சிப்படுத்தலாம்.

77. நாலு சுவிசேஷங்களும் மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர் என்பவர்களால் எழுதப்பட்டவை என்று எப்படி அத்தாட்சிப்படுத்தலாம்?

அவைகளை அந்த நாலுபேருந்தான் எழுதினார்கள் எனத் திருச்சபைமுழுத்திலும் 150-ம் ஆண்டுக்கு முன்னே ஏற்கப்பட்டதென்று சாந்தப்பர் (95), இன்னாசியார் (107), பொலிக்காப் (120), பப்பாயஸ் (130), யஸ்ரின் (130), கேர்மஸ் (150), ரற்சியன் (170), ஐறேனியஸ் (180), ரேற்ரல்லியன் (200), ஒறிஜின் (220) என்னும் கிறீஸ்தவர்கள் சொல்லும் சாட்சியினால் அத்தாட்சிப்படுத்தலாம்.

78. அந்தக்காலத்துப் பதிதரும் அக்கியானிகளும் இந்தச் சாட்சிக்கு எதிராக யாதேன் சொல்லுகிறார்களோ?

இல்லை. இந்தச் சாட்சியோடு பசிலிடஸ் (130), வலென்ரீனஸ் (130), மார்சியன் (150) என்னும் பதிதரும், செல்சஸ் (178) என்னும் அக்கியானியும் இணங்குகிறார்கள். ரசிற்ரஸ் (54-117), சுஎற்ரோனியஸ் (70-121) என்னும் அக்கியானிகளும், யோசவஸ் (37-100) என்னும் யூதனும் சுவிசேஷங்களைப் பற்றி ஒன்றும் சொல்லாவிட்டாலும், யேசுநாதருடைய சீவியத்துக்குச் சாட்சியாய் இருக்கிறார்கள்.

79. நாலு சுவிசேஷங்களும் எழுதப்பட்டகாலந்தொட்டு இதுவரைக்கும் மாற்றமில்லாமல் காப்பாற்றப்பட்டவை என்று எப்படி அத்தாட்சிப்படுத்தலாம்?

மூன்றும் நூற்றாண்டு தொடக்கம் நாலு சுவிசேஷங்களையும் பார்த்துக் கையாலே எழுதப்பட்ட அநேக புத்தகங்கள் உண்டு. இவைகளுக்கும் நாம் இப்போது வைத்திருக்கும் சுவிசேஷப் புத்தகங்களுக்கும் இடையில் கனங்கொண்ட வித்தியாசம் ஒன்றுமில்லையென்று காட்டி அத்தாட்சிப்படுத்தலாம்.

80. சுவிசேஷங்களில் மாற்றங்கள் செய்வது அக்காலத்தில் இலேசாய் இருந்ததோ?

இல்லை. ஏனெனில் சுவிசேஷங்கள் வெளிவந்தகாலந்தொட்டு, அவை கிறீஸ்தவர்களுக்குள்ளே பரம்பி, வேறு பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, கோயில்களிலே வாசிக்கப்பட்டு, வேதபாரகரால் எடுத்துச் சொல்லப்பட்டு வந்தன. ஆகையால் மாற்றங்கள் தோன்றினவுடன் இலேசாய்க் கண்டுபிடித்துத்தடுக்கப்படக்கூடும். அப்படிப் பல முறைகளில் தடுக்கப்பட்டதென்று அறிகிறோம்.

81. நாலு சுவிசேஷங்களும் உண்மையான சம்பவங்களையே கூறுகின்றன என்று எப்படி அத்தாட்சிப்படுத்தலாம்?

அவைகளை எழுதினவர்கள் மற்றவர்களால் அணுப்பப்படக்கூடிய அல்லது நம்மை அணுப்பக்கூடிய ஆட்களல்ல என்றும், அவர்கள் அணுப்ப எண்ணினாலும் அவர்களால் அணுப்ப இயலாது என்றும் காட்டி அத்தாட்சிப்படுத்தலாம்.

82. அவர்கள் ஏன் மற்றவர்களால் அணுப்பப்படக்கூடியவர்களல்ல?

ஏனெனில் மத்தேயும் அருளப்பரும் யேசுநாதரோடு கூடித்திரிந்த அப்போஸ்தலர்களானபடியால் தாங்கள் கண்ட காரியங்களையே எடுத்துக் கூறினார்கள். மாற்கும் லூக்காசும் அப்போஸ்தலர்களுடைய சீஷர்களானபடியால் தாங்கள் அப்போஸ்தலர்களிடமிருந்து கேட்ட காரியங்களையே எடுத்துக் கூறினார்கள்.

"நாங்கள் இந்தச் சங்கதிகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்"—அப். நட. V. 32.

"நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாதிருக்கக்கூடாதே என்றார்கள்"—அப். நட. IV. 20.

83. அவர்கள் அணுப்பப்படக்கூடாத சாட்சிகள் என்பதற்கு என்ன அடையாளங்கள் உண்டு?

அவர்கள் யேசுநாதர்காலத்தில் பலஸ்தீனா தேசத்தின் இடங்களையும், ஆட்களையும், அதிகாரிகளையும், பாஷைகளையும், வழமைகளையும் ஒரு பிழையுமில்லாமல் விபரிக்கிறதேயாம்.

"திபேரியூ என்னும் செசாருடைய இராச்சியபாரத்தின் பதினைந்தாம் வருஷத்திலே, போஞ்சு பிலாத்து என்பவன் யூதேயா தேசத்துக்கு அதிபதியாகவும்...அன்னாஸ், கைப்பாஸ் என்பவர்கள் பிரதான ஆசாரியர்களாகவும் இருந்த காலத்தில்..."—லூக். III. 1-2.

84. அவர்கள் ஏன் நம்மை அணுப்பக்கூடியவர்களல்ல?

ஏனெனில் அவர்கள் பரிசுத்தராய்ச் சீவித்து, இவ்வுலகில் ஒரு நன்மையையும் விரும்பாமல், தங்களுடைய சாட்சியின் உண்மைக்காகச் சீவனைக் கொடுத்தவர்கள். அவர்கள் உண்மையான சாட்சிகள் ஆனபடியால்தான், அப்போஸ்தலர்களுடைய குற்றங்களைப்பற்றியும் எழுதினார்கள்.

"யேசுநாதர் திரும்பி இராயப்பரைப்பார்த்து: சாத்தானே என் பின்னாலே போ என்றார்"—மத். XVII. 23.

"மற்றப் பத்துப்பேர்களும் அதைக்கேட்டு, யாகப்பர் மேலும், அருளப்பர்மேலும் எரிச்சல் கொள்ளத் துவக்கினார்கள்"—மாற். X. 41.

85. அவர்கள் ஒரே சம்பவத்தைப் பற்றி எழுதினவைகளுக்கிடையிலும் வித்தியாசம் தோன்றுகிறபடியால், அவர்களை எப்படி நம்பலாம்?

அவர்கள் எழுதினவைகளுக்கிடையில் வித்தியாசம் தோன்றினாலும், உள்ளபடி இணக்கமிருக்கிறதென்று காட்டலாம். தோற்றத்தில் என்கிலும் வித்தியாசம் இருக்கிறபடியால்தான் அவர்களைப் பொய்ச்சாட்சி சொல்ல இணங்காத சாட்சிகள் என்கலாம்.

86. அவர்கள் அணுப்ப எண்ணினாலும் ஏன் அவர்களால் அணுப்ப இயலாது?

ஏனெனில், அவர்களுடைய புத்தகங்கள் வெளிவந்த காலத்தில் அவைகள் விபரிக்கும் சம்பவங்களைக் கண்டவர்கள் சீவனோடிருந்தபடியால், அவர்கள் பொய்சொல்லித் தப்பமுடியாது. யேசுநாதருடைய சீஷர்கள் எல்லோரும் எப்போதும் எல்லோரையும் அணுப்ப முடியாது.

87. ஆகையால் யேசுநாதருடைய சரித்திரம் வைப்புக்கட்டாய் இருக்கக் கூடுமோ?

இல்லை. யேசுநாதரை வைப்புக் கட்டினவர்கள் அவரிலும் பார்க்கக் கெட்டிக்காரராய் இருக்கவேண்டுமென்று வேதசத்துராதியான ரூசோ என்பவன் எழுதிவைத்தான்.

---

## திருஇருதய இராசாங்க ஸ்தாபகம்

பதுவைப்பதியாராம் அர்ச். அந்தோனியாரைப் பாதுகாவலராகக்கொண்ட எமது கலாசாலை மாணவமாணவிகள் தங்களையும், தங்களைச்சேர்ந்தோரையும் கிறீஸ்துஇராசாவுக்கு நேர்ந்து ஒப்புக்கொடுத்து அவரைத் தமது இருதயங்களின் இராசாவாக ஏற்றுக்கொண்டதைப் புதுப்பிக்கவேண்டிப் புனிதஉடைஅணிந்து அன்று திவ்விய பூசைகண்டு திருவிருந்தருந்தித் தெய்வீக நாதரைவாழ்த்தித் துதிக்குமாறு கலாசாலையில் அணிவகுத்து நின்றார்கள். அவ்வேளை கலாசாலை பன்னிறத் துவசங்களாலும், பொன்னிற மலர்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்க, இருதயநாதரின் திருச்சுரூபம் அழகிய சிம்மாசனமொன்றில் எழிலுற்று இலங்க, இருமருங்கும் பலவர்ணத் தீபங்களும், மெழுகுவர்த்திகளும் பூரணகாந்தி வீசிக்கொண்டிருந்தன. காலை 10 மணியளவில் வண. கட்டளைக்குரவர் கலாசாலையைஅடைந்து, திருஇருதய ஸ்தாபனத்தையும் அதனால் ஏற்படும் கடமைகளையும்பற்றி அரியபொன்மதிகள் கூறினர். பின்னர் கலாசாலைப்பாலியரும், ஏனையோரும் கரம்குவித்து, சிரங்குனிந்துநிற்க, சங். தலைமைஆசிரியர், மாணவர்கள் மக்கள்அனைவரையும் கிறீஸ்துஇராசாவுக்குப் பெரிதும் உருக்கமானமுறையில் ஒப்புக்கொடுத்தனர். அத்தருணம் அவர்கள் இனியகீதமொன்று பாடி, திருஇருதயநாதரைத் தங்கள் இருதயங்களின் அரசராக ஏற்றுக்கொண்டார்கள். அதேவேளையில் தானே வண. கட்டளைக்குரவர் பல நிறத்துவசங்கள், நறுமலர்கள், மெழுகுவர்த்திகளாலே சிங்காரிக்கப்பெற்றுத் திருஇருதயநாதரின் வலதுபாரிசத்திலே சிறியபீடமொன்றில் இருந்த மாசில்லாத இருதயநாயகியையும் ஸ்தாபித்தார். மாணவர் தங்கள் இருதயங்களை ஓர் இன்னிசையின் மூலம் மாதாவின் இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தனர். ஈற்றில் தேவதாயாரின் பாதகாணிக்கைச் செபத்துடன் வைபவம்இனிது முடிவுற்றது.

பாஷையூர் —ஓர்மாணவன்

# பொதுவர்த்தமானம்

### உயரப்பறக்கும் விமானங்கள்

இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமான காலத்திலே வெடிகுண்டு விமானங்கள் பதினாயிரம் அடிக்கும், பதினையாயிரம் அடிக்குமிடையில் உயரப் பறந்தன. போர்விமானங்கள் இன்னும் கூடுதலாக ஐயாயிரம்அடி பறக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யுத்தம் முடிவாகிற காலத்திலே பளுவானவெடிகுண்டுவிமானங்கள் இருபத்தையாயிரம் அடிஉயரத்திலும், போர்விமானங்கள் முப்பதாயிரம் அடிஉயரத்திலும், மொஸ்குய்ற்றோ போலும் இலேசான வெடிகுண்டு விமானங்கள் முப்பத்தையாயிரம் அடி உயரத்திலும் பறந்தன. தற்போது அதிகம் பிந்திய நவீனமாதிரியான வெடிகுண்டு விமானங்களும், யெற்போர்விமானங்களும் நாற்பதினாயிரம்அடி உயரத்தில் பறக்கத்தொடங்கிவிட்டன. அதனால் அடுத்த சந்ததிவிமானங்கள் இன்னுங் கூடுதலாகப் பதினாயிரம்அடி உயரப் பறக்குமென்று நம்பப்படுகிறது.

### பெல்ஜியதேச அரசர்

பெல்ஜியதேச மூன்றாவது லெயோப்போல்ட் அரசர் இற்றைக்கு 48 வருடங்களின் முன்னே கார்த்திகைமாதம் 2-ந்திகதி பிறந்தார். 1945-ம்ஆண்டு முதல் ஓர் தேசாந்திரியாகித் தமது இரண்டாந்தார மனைவியாகிய டெறெதி இளவரசியுடன் சஞ்சரித்துவருகின்றார். இவர் அரசராகத் திரும்பவும் பெல்ஜியத்துக்கு வருவதா; இல்லையா என்பதுபற்றிச் சமீபத்திலே பொதுசனவாக்கு எடுக்கப்படவிருக்கிறது. அந்நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்கள் அவர் திரும்பவும் அரசராக வேண்டுமென நிற்கின்றார்கள். அபேதவாதிகள் அவர் வரப்படாதென நிற்கின்றார்கள். போடப்படும் சீட்டுகளில் நூற்றுக்கு 55 வீதம் தமக்குக் கிடைத்தால் அல்லாது மற்றப்படி தாம் பெல்ஜியத்தில் கால்வைப்பதில்லை என்பதே அரசரின் தீர்மானம்.

### கண்ணாடிவீடும் சுகாதாரமும்

அமெரிக்க ஐக்கியதேச மெசாசுசெற்நகரிலே நூதனமான ஓர்வீடு கட்டப்பட்டிருக்கிறது. இந்த வீடுமுழுவதும் சுவாளவு உயரத்துக்குக் கண்ணாடிகள் பொருத்தப்பெற்று ஒருவித ரசாயனப்பொருளும் பூசப்பட்டிருக்கிறது. இது அதிகம் சுகாதாரம் நிறைந்த வீடென்றும், அதில்வசிக்கும் தமது நாலுவயதுப்பிள்ளை சென்ற எட்டுமாசங்களுள் ஏழு அங்குலஉயரம் வளர்திருப்பதாகவும் அந்தவீட்டின் சொந்தக்காரர் கூறுகிறார். வெயில் காலத்திலும், குளிர்காலத்திலும் வெளியே உஷ்ணம் எவ்வளவு மாறுதல் அடைந்தபோதிலும் அவ்வீட்டுள் மாத்திரம உஷ்ணம் ஏறக்குறைய ஒரேதன்மையாக இருக்கிறது. இந்தவீட்டில் உபயோகிக்கப்பட்டுள்ள இரசாயனப் பொருள் பூச்சு இவ்விதம் உஷ்ணத்தைச் சமன்படுத்திக் குளிரும் அதிகரியாமல் தடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

### அமெரிக்க தங்கம்

யுத்தவருடங்கள் நீங்கலாகக் கடந்த பதினைந்து வருடங்களாக அமெரிக்க ஐக்கியதேசத்தில் இடையீடில்லாது போய்ச்சரிந்து கொண்டிருந்த தங்கம் இப்போது அத்தேசத்தினின்றும் வெளியே ஆற்றோட்டமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அங்கிருந்து பிற நாடுகள் தங்கத்தைவாங்கிக் கொண்டிருப்பதானது, கடந்த ஏழுவாரங்களிலும் அமெரிக்க பெரியதங்கஇருப்பைப் 11 கோடியே 80 லட்சம் டலரால் குறைத்துவிட்டிருக்கிறது. என்றாலும் அத்தேச தங்கஇருப்பு 2,458 கோடியே 30 லட்சம் டலர் பெறுமதியுள்ளதாம். அதாவது பணவிஷயமாகப் பார்க்குமிடத்து, உலகமுழுவதிலுமுள்ள இருப்புத்தங்கத்திலே ஐந்தில் மூன்றுபங்கும்அமெரிக்கஐக்கியதேசத்தில்தான் இருந்துவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரேதக்குழிகளின் பிரலாபம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களே! உங்களால்தான் நான் இந்தச்சிறைச்சாலையிற் கிடந்து சாகாமற்சாகின்றேன். உங்கள் சுகசேமந்தான் என்னை இக்கதிக்குள்ளாக்கியது. அப்படியிருக்க நீங்கள் என்மேல்இரங்கமாட்டீர்களா? உங்கள் ஆடம்பரமான உடைகளையும், காட்சிப்பிரியங்களையும், விருதாவான செலவுகளையும் ஒறுத்து எனக்காக ஏழைகட்குத்தருமஞ்செய்ய மாட்டீர்களா? என்று மிகஅங்கலாய்ப்போடுஓர் சத்தம்எழுந்தது.

இச்சத்தம் முடிந்ததுமுடியாமலே இதோ! அவர்களின் பக்கமாய்இருந்த பிரேதக்குழிகள் இரண்டு திறபட்டுஅதில்இருந்து: "எங்கள்அன்பான பேரப்பிள்ளைகளே! எங்களை இவ்வளவு கெதியில் நீங்கள்மறந்துவிட்டீர்களா? நீங்கள்சின்னஞ்சிறுவர்களாக இருந்தபோதுகண்ணுறக்கங்கொள்ளாமல் உங்களைக் காத்துவந்தோமே.உங்கள்பிரதியன்பை இப்போஎங்களுக்குக் காண்பிக்கமாட்டீர்களா? ஆ! எங்கள்செல்வர்களே! நாங்கள் இந்தச்சிறைச்சாலையில் எவ்வளவோ அவதிப்படுகின்றோம். தேவனைக்காணமல் எங்களால் ஒரு கணப்பொழுதும் போக்கமுடிகிறதில்லையே. அவரைக்காணுவோம்என்று நாங்கள் நெருப்பில்இருந்து மேலேபறந்துசெல்கின்றோம். எவ்வளவு உயரம் பறந்தாலும் நெருப்புமண்டலத்துள்ளேயேகிடந்து மூக்குளிக்கின்றோம். இன்னும்மேலேமேலே அதிகதூரம்போய்விட்டால் ஆ! தேவநீதியின்கரம் எங்களைத் தாக்குகின்றது. அன்பான பிள்ளைகளே! தேவனைக்காண்பதில் எங்களுக்குள்ள ஆவல்எவ்வளவென்று நாங்கள்சொன்னல் உங்களுக்கு விளங்கப்போகிறதா? உலகத்தில்அதற்கு ஒருஉவமையுங் காணமுடியாதே. அன்பான காதலர்கள் பிரிந்திருந்தால் எப்படியிருக்கும்? தாயும் அவளது அருமைக்குழந்தையும்பிரிந்திருந்தால் எப்படியிருக்கும்? நீங்களே சொல்லுங்கள். அவைகளைப் பார்க்கிலும் ஆயிரமாயிரம் மடங்கு நாங்கள்அவரைப் பிரிந்திருப்பதாற் துன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். எங்கள்செல்வமக்களே! நாங்கள் தேவனைப் பிரிந்திருப்பதுதான் எங்களது ஆகப்பெரியவேதனை. இதை உங்களுக்கு விளங்கப் படுத்த எங்களால் முடியாது. நீங்களும் மரித்து எங்களைப் போலத் தேவனைப்பிரிந்திருந்தால்மாத்திரந்தான் இதன் கொடுமை எவ்வளவென்று விளங்கிக்கொள்வீர்கள். எங்கள் இன்பக் கண்மணிகளே! எங்களைத் தேவனுடன் ஒன்றுசேர்க்கும்வல்லமை உங்கள் கையில் இருக்கின்றது. எங்களுக்காக அனுதினமும் அதிகமதிகமாகச் செபியுங்கள். நாங்கள்எவ்வளவுதான் தேவனை இரந்துமன்றாடினாலும் எங்கள்மன்றாட்டுக்குப் பலனேகிடையாது. ஆனால், உங்கள் சிறியசெபங்களுக்குக்கூடப் பெரியபலன் கிடைக்கிறது. அப்பலன்களை எங்களுக்காக ஒப்புக்கொடுத்து எங்களைஈடேற்றுங்கள்" என்றபிரதாபத்தொனிஏற்பட்டு அவர்களைக் கலங்கவைத்தது.

(தொடரும்)

## இரகசியங்கள் ஒன்பதும் எவையாய் இருக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுவைக் கேட்கும்போது, அவள் புன்னகையே செய்கிருளன்றி யாதொன்றும் சொல்லுகிருளில்லை. இன்னமும் அவளுக்குச் சொல்லப்பட்ட சிலகாரியங்கள் இருப்பதாக மாதாவின் கடாட்சம்பெற்ற அனிற்ரு கூறுகின்ருள். இவைகளை அவள் இப்போதைக்கு ஒருவருக்குமே வெளியிடமாட்டாள். அம்மேற்றிராசனத்தின் மேற்றிராணியார் அவளுடன் சம்பாஷித்தபோது, அவைகளை அவருக்குத்தானும் அவள்தெரிவிக்கவில்லை. அப்படியான "இரகசியங்கள்" ஒன்று இரண்டல்ல, ஒன்பது இருக்கின்றன. அவற்றிலே மூன்றும் அதுமுதல் ஐந்துவருடங்களுக்குப்பின், அதாவது 1953-ம் ஆண்டு பாஸ்குத்திருநாளன்றும், ஏனையஆறும் பதினைந்துவருடங்களுக்குப்பின், அதாவது 1963-ம் ஆண்டு பரிசுத்தவியாகுலமாதா திருநாளன்றும் வெளியிடப்படவிருக்கின்றன. அந்த இடத்திலே ஓர் சிற்றாலயம் கட்டப்படவேண்டுமென்றும், அங்கு யாத்திரைகள் நடந்தேறவேண்டுமென்றும் தாம் ஆசிப்பதாகவும் தேவதாயார் கூறலாயினர். இன்னும் அந்தஸ்தலத்திலே தினமும் குறைந்தபட்சம் முப்பது செபமாலைகளாவது சொல்லப்படவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். அதுமுதல் அந்தஇடம் மேலே உயர்த்தப்பெற்றுச் சூழவரக் கிறுதியிட்டு அடைக்கப்பட்டிருக்கிறது. கும்பல்கும்பலாக நாள்தோறும் மக்கள்சென்று அதனைச்சந்தித்துப்போகிறுர்கள்.

(தொடரும்)

### நேர்த்தியின் பூர்த்தி

மாத்தலன் கபிரியேல் இறப்பியேல் என்பவரின் மகன்பிறந்து ஆறுவருடகாலமாக நடவாதிருந்தார். யான் அர்ச். அந்தோனியார் பேரில் நேர்த்திவைத்தேன். தற்போது அவர் நடக்கத்தொடங்கி விட்டார். அர்ச். அந்தோனியாரின் நாமம் புகழப்படுவதாக.

Mrs. Rajaratnam

### நேர்த்தியின் பூர்த்தி

மாத்தலன் கபிரியேல் யோசேப்பு என்பவரின் மகன்பிறந்து இரண்டு வருடகாலமாகியும் கால்வழங்காதிருந்தார். யான் அர்ச். அந்தோனியார்பேரில் நேர்த்தி வைத்தேன். தற்போது அவர் நடக்கத் தொடங்கிவிட்டார். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

Mrs. Rajaratnam

### நேர்த்தி

யான் அநேக வருடகாலமாக வாய்நோயினல் பெரிதும் அவஸ்தைப்பட்டு வந்தேன். கடைசியாக அர்ச். அந்தோனியார்பேரிலும், அர்ச். ஆரோக்கியநாதர் பேரிலும் நேர்த்திவைத்தேன். தற்போது அந்நோய் குறைந்துவிட்டது. பூரணசுகத்திற்காக மன்றாடுகின்றேன்.

Mrs. Rajaratnam

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 25-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். அங்கத்தவர்கள் நேரத்தோடு வரும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். மார்கழிமாதம் பின்வரும்தேதிகளில் பரிபூரணபலன்களை அடைந்து கொள்ளலாம்: 8, 9, 12, 15, 25, 26, 27, 28. நிபந்தனைகள்:—பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணைபெறல், ஆசனக்கோவிலைச்சந்தித்தல், அர்ச். பாப்பானவருடைய கருத்துகளுக்காக மன்றாடல். மார்கழி 8-ம், 25-ம்தேதிகளில் பொதுப்பாவமன்னிப்புஇருக்கும். கூட்டத்துக்குமுன் ஆலோசனைச்சங்கம் நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY
for Director.

## மரியாயின் சேனை

கவனிப்பு

மரியாயின்சேனைச் சைனியத்தலைவர்கள்எல்லோரும் தங்களுக்குஅனுப்பப்பட்ட இரண்டுபத்திரங்களையும் நிரப்பித் தாமதமில்லாமல் எமக்கு அனுப்பிவைக்கும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

A. S. பிரான்சீஸ் ஒவ் மேரி
யாழ்ப்பாணக் கியூறியித் தலைவர்

மேற்றிராசனமாளிகை
யாழ்ப்பாணம்

## உமது உணவை மென்று அருந்துக

உமதுபற்கள் உமக்குஅழகையும், வசீகரத்தையும் மாத்திரம் தருவன அல்ல. ஆனல், உமது உணவை நன்ருய்மென்று அருந்தவும் உதவுகின்றன. இது நீர் உண்பதை நன்கு சீரணிக்கச் செய்வதில் இன்றிமையாத ஓர் காரியமாகும்.

துரதிஷ்டவதமாய் உமது இயற்கைப் பற்களை நீர் இழந்து போய் விட்டீரானல், இனி நீர் செய்யக்கூடிய சிறந்த காரியம், செயற்கைப் பல்கட்டும் ஓர்பல் வைத்தியரை நாடிப்போக வேண்டியதுதான்.

நல்லஉறுதியும், நன்ருகநின்று பிடிக்கக் கூடியதுமாய்ச் செயற்கைப்பற்களுக்கு இணையானபிரபையுள்ள அதிகம் புதிய வஸ்தைக்கொண்டு செயற்கையான வரிசைப் பற்களை நாம்செய்து உதவிவருகின்றோம். இவ்வாறு பற்களை அமைக்கும் முறையானது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட அதிகம் புதிய முறையாகும்.

தயவுசெய்து ஓர்தரம் நம்மைச் சந்தித்து ஆலோசனை கேட்பீராக! இதற்கு நீர் எவ்வித உபகாரமும் செய்யவேண்டியதில்லை.

நாம்செய்யும் ஒவ்வோர்பணிக்கும் உத்தரவாதம் அளிக்கின்றோம். எப்போதும் திருப்தியடைந்து செல்லும் ஆயிரக்கணக்கான வாடிக்கைகாரரே நமது சிறந்த பிரசித்தகாரர்கள்.

பத்திருனுஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## மதித்தற்கரிய கொடையின் நஷ்டம்

### கண்பார்வை குன்றுவதே

வயது போகப்போக, அதாவது ஏறக்குறைய 40 வயசில், அல்லது சிலவேளை அதற்குமுன் தானும் சாமானிய கண்கள் பார்வையில் குன்றும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதுவரை அதிகம் நெகிழ்ந்து உறளத்தக்கனவாயிருந்த கண்ணின் ஒளிவட்டங்கள் இப்போது கடினமும், விறைத்தனவும் ஆகின்றன. இது முற்றும் இயற்கையான மாற்றமே. இதிலே விளைவதென்ன? கண்ணின் தசைநார்கள் ஒளிவட்டங்களிலே சரியாகக் கருமம் ஆற்றத் தவறுகின்றன. அப்போது இந்த ஒளிவட்டங்கள் பல்வேறு தூரங்களுக்குப் பார்வையைச் செலுத்த இடங்கொடுக்க முடியாதனவாகும். அதனல் கண்களிலிருந்து அதிக தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஓர்சார்பும், அதிகம் பிரபையான வெளிச்சம் வேண்டுமென்ற விருப்பும் உண்டாகின்றன. எழுத்துகள் களங்கமுற்று ஒன்று மற்றொன்றினுள் சொருகுகின்றன. பகலில் விசேஷமாய்ச் செயற்கை வெளிச்சத்தில் வாசித்தபின் கண்கள் களைகொள்ளுகின்றன. பின்னர் தலையிடி உண்டாகிறது. அநேகமுறைகளில் பார்வைத் தூரம்முற்றும்நன்ருயிருக்கிறது. ஆனல் சமீபவேலைக்கு உதவாதிருக்கிறது.

கண்பார்வையைப் பரிசோதிப்பதிலும், தகுதியான மூக்குக் கண்ணடிகளைத் தெரிவுசெய்து கொள்வதிலும் நமக்குள்ள அனுபவத்தை உமக்கு முற்ருகக் கையளிக்கிறோம். இக்காலமாதிரியான புத்தப்புதிய கருவிகளெல்லாம் இதுவிஷயமாய் நம்மிடம் கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன.

நல்ல கண்பார்வையுடையவர்கள் மூக்குக்கண்ணடிகள் போடவேண்டியதில்லை. ஆனல் இவர்களின் நட்பும், ஆதரவும் ஒரு மூக்குக்கண்ணடியை விற்பதிலும் எவ்வளவோ கூடிய மதிப்புள்ளன. உமது கண்களில் பழுது காணும்போதுதான் நமது வியாபாரதலத்துக்கு வரும்படி அழைக்கிறோம்.

பத்திருனுஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## வேத புத்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். சூரேதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

தாமஸ்றொட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 30 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 17 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org